Approved by the Text Book Committee, Madras
vide Page 19 of Part I. B. Ft. St. G. G. dated 4-4-1956.

காவேரி தமிழ் வாசகம்

முதற் படிவம் — சிறப்புப் பகுதி

ஆக்கியோர் :

பி. எஸ். கோவிந்தராஜன், B.A.,

வித்துவான் அ. விஜயராகவன்.

பி. எஸ். உயர்நிலைப்பள்ளி, மைலாப்பூர்.

ஸ்ரீ ஷண்முகா பப்ளிஷிங் ஹவுஸ்,

மன்னார்குடி.

[விலை 62 நயே பைசே
(10 அணா)

முதற் பதிப்பு : 1955
இரண்டாம் பதிப்பு : 1957

முகவுரை

அரசியலார் அண்மையில் ஆரம்பப் பள்ளியில் தேர்ச்சி பெற்றுவரும் மாணவர்க்கெனத் தமிழ்ப்பாட வியலைத் திருத்தி வெளியிட்டுள்ளனர். அதைப் பின்பற்றி, தாய் மொழியாம் தமிழ் மொழியை ஐந்து ஆண்டுகள் கற்ற பிள்ளைகள், தமிழை மேன்மேலும் கற்க ஆர்வம்கொள்ளவேண்டும் என்ற அடிப்படை நோக்கத்துடன் "காவேரி தமிழ் வாசகம்" என்ற பெயரிய இந்நூல் வெளி வருகின்றது.

இந்நூலில் தமிழ் கற்கும் பிள்ளையுள்ளமும், சூழ் நிலையும், அறிவாற்றலும் கருதப்பட்டும், ஏற்ற கட்டுரைகள் எழுதப்பட்டும் செய்யுட்கள் சேர்க்கப்பட்டும் உள. அவை பிள்ளைகளின் தமிழார்வத்தையும், சிந்தனை யூக்கத்தையும் அதிகரிக்கும் என்பது எமது துணிபு.

ஒவ்வொரு பாடத்தின் பின் பயிற்சிகள் பல இணைக்கப்பட்டுள. அன்றியும் இலக்கணப் பயிற்சிகளும் இலக்கண நூலின் பகுதியும் உளதால் மாணவர்கள் இலக்கணத்திலும் உறுதி பெறுவர் என்பது ஒருதலை.

மாணவர் இந்நூலைப் படித்துப் பயன் பெற்றுத் தமிழறிவு கொள்ளுமாறு சான்றோர் எமக்கருள் புரியும்படி பணிவுடன் வேண்டுகின்றனம்.

ஆசிரியர்கள்.

ராஜன் எலக்டிரிக் பிரஸ், சென்னை-1.

பொருளடக்கம்

செய்யுட் பகுதி

நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல வங்க
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்க
தவ ஸுப நாமே ஜாகே
தவஸுப ஆசிஷ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே! ஜயஹே! ஜயஹே! ஜயஜய ஜயஜயஹே!

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான் மக்கள் எல்லோருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாபையும் சிந்துவையும் குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும் திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி யடையச் செய்கிறது.

அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது.

யமுனை கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது.

இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன. நின் புகழைப் பாடுகின்றன.

இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு வெற்றி, வெற்றி, வெற்றி.

1. சேக்கிழார்

முன்னோர் அமிழ்தினுமினிய செந்தமிழ் நாட்டைச் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு, கொங்கு நாடு, நடு நாடு, தொண்டை நாடு என்று இவ் வகையாகப் பிரித்திருந்தனர். இதனுள் தொண்டை நாடே கல்வி கேள்வி ஒழுக்கங்களிலே சிறந்த சான்றோரைப் பெற்றது. இதனைத் 'தெண்ணீர் வயல் தொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என்று புகழ்வாராயினர். இந்நாடு வடக்கே வேங்கடம் முதல் தெற்கே தென் பெண்ணையாறு வரையிலுள்ள நிலப்பரப்பு ஆகும். இதை இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரித்திருந்தனர். அதனுள் புலியூர்க் கோட்டம் என்பதும் ஒன்று.

இப்புலியூர்க் கோட்டத்தில் குன்றத்தூர் என்பது ஓரூர். இவ்வூர் பல்லாவரம் என்னும் புகைவண்டி நிலையத்திலிருந்து நான்கு கல் தொலைவிலிருக்கிறது. சென்னையிலிருந்து பதினாறு மைல் தூரத்திலிருப்பது; இவ்வூரில் சிறிய குன்று இருப்பதனால் குன்றத்தூர் எனப் பெயர் பெற்றது என்பர். இதனுள் திருநாகேச்சுரம் என்னும் சிவன் கோவில் ஒன்று இருக்கிறது.

இத்தகைய ஊரில் வேளாளர் மரபில் சேக்கிழார் என்பவர் தோன்றினர். இவரது இயற் பெயர் அருள்மொழித் தேவர் என்பது; இவர் திருத்தொண்டர் புராணத்தைப் பாடியதனால் இவர் குடிக்குச் சிறப்பு ஏற்பட்டது. இதுபற்றி இவரைக்

குடிப் பெயராலேயே சேக்கிழார் என்று கூறுவாரா யினர். 'சே' என்றால் காளை; 'கிழார்' என்றால் உரிமையாளர்; காளைகளைக் கொண்டு பயிர்செய்யும் உரிமையுள்ளவர் என்று பொருள்; ஆதலால் சேக்கிழார் என்பதற்குப் பயிர்த் தொழிலை உரிமையாகக் கொண்டவன் என்று பொருள். இவர் இளமையி லிருந்தே கூரிய அறிவும் ஒழுக்கமும் உடையவரா யிருந்தார்.

இவர் இளம்பிராயத்தில் கல்வி கற்கத் தொடங்கினார். அக்காலத்தில் மாணவர்கள், ஆசிரியர் மனப்பாடம் செய்யவேண்டும் என்று கூறும் நூல்களை மனப்பாடம் செய்யவேண்டும்; மணலில் எழுத வேண்டும்; ஓலைச் சுவடியில் உள்ளவற்றைப் படிக்கவேண்டும். இவற்றையெல்லாம் சேக்கிழார் செய்து புலமையும் பெற்றார். திருக்குறள், சீவக சிந்தாமணி முதலிய இலக்கியமனைத்தையும் ஐயந் திரிபறக் கற்றார். தாயாரிடம் சிவனடியார்களின் வரலாறுகளையும் கேட்டுத் தெரிந்துகொண்டார்.

இந்நாளில் சோழநாட்டை யாட்சி செய்துவந்தவன் அநபாய சோழன் என்பவன்; இவனது இயற்பெயர் இரண்டாம் குலோத்துங்கன் என்பது. இவனது தந்தை விக்கிரமச் சோழன்; இவன் சிறந்த தமிழ்ப் புலமை யுடையவன். புலவர்களிடம் பேரன்பு பூண்டவன்; சிறந்த சிவபக்தன். இவன் தன் பெரும் பொழுதைச் சிதம்பரத்திலே கழிக்கலானான். இவன் சிதம்பரத்தில் தந்தை விட்டுச் சென்ற திருப்பணிகளைக் குறைவற நிறைவேற்றினான்.

இவ்வநபாயன் சபையில் ஒட்டக்கூத்தர் அவைப் புலவராகத் திகழ்ந்தார். இவர் இவ்வநபா

யனது தந்தை விக்கிரமன், அநபாயன், அநபாய னின் மகனுன இரண்டாம் இராஜராஜன் ஆகிய மூவரின்மீதும் உலா ஒன்றும் பாடியுள்ளார். அது மூவருலா எனப்படும். ஒட்டக்கூத்தருடன் பல புலவர்களும் கூடித் திகழ்வர். ஒரு சமயம் அநபா யன் என்பவன் புலவர்களனைவரையும் பார்த்துப் "புலவர்களே, என் உள்ளத்தில் உங்களிடம் மூன்று கேள்விகள் கேட்க வேண்டுமென்ற அவா பல நாட்களாக இருந்து வருகிறது. அவற்றை இன்று கேட்கிறேன். நீங்கள் அதற்கு விடைகூற வேண்டும்" என்ருன். இதனைக் கேட்ட புலவர்கள் 'அரசன் என்ன கேட்டு விடுவானே? நம்மால் விடை கூற முடியுமோ? விடை கூற முடியாத கேள்விகளைக் கேட்டால் நமக்கு அவமானம் நேரிடுமோ' என்று எண்ணி அரசனின் வினவை எதிர்நோக்கியிருந்தனர். அரசன்,

"மலையிற் பெரியது எது? கடலிற் பெரியது எது? உலகிற் பெரியது எது?" என்று மூன்று வினக் களைக் கேட்டான்.

இவ்வினக்களைக் கேட்ட புலவர்கள் இது தமிழ் நூல்களைப் பற்றியவை என்று எண்ணுமல் பொது வான கேள்வி என்று எண்ணி இம் மூன்று வினக்க ளுக்கும் விடையளித்தல் அரிது என்று கருதினர். மலையையும், கடலையும், உலகினையும்விடப் பெரி யது இல்லையென்று தமக்குள் பேசிக்கொண்டனர்.

அநபாயனின் வினக்கள் தொண்டை நாட்டில் பரவின. புலவர்கள் எல்லாரும் விடைகாண முயன்றனர். முடியவில்லை. இது சேக்கிழார் காதில்

விழுந்தது; தமக்குள் ' திருக்குறளைப் படித்தவர்களே இதற்கு விடைகூற இயலும் ' என்று கூறிக்கொண் டார். உடனே கேள்விகளுக்கு ஏற்ற விடையாக,

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

இம்மூன்று குறள்களையும் மூன்று கேள்விகளின் கீழ் ஓலையில் எழுதித் தக்கவர்மூலம் அநபாயனிடம் சேக்கிழார் அனுப்பினார். சேக்கிழாரின் விடையைக் கண்ட அநபாயன் மிகவும் மகிழ்ந்து புலவர்களிடம் கூறிவிட்டுச் சேக்கிழாரைத் தன்னிடம் வரும்படி பல்லக்கு அனுப்பினான். சேக்கிழாரும் வந்தார். வந்தவரை வரவேற்று அவரை உபசரித்தான் அந பாயன்; சேக்கிழார் இலக்கியம், அரசியல், சமயம் மூன்றிலும் வல்லவர் என்பதை அறிந்துகொண் டான். உடனே பேரவை ஒன்று கூட்டிச் சேக்கிழா ரையும் அவையோரையும் பார்த்து "தொண்டை நாட்டுப் புலவராகிய சேக்கிழார் இன்று முதல் நம் சோழநாட்டு முதல் அமைச்சரா யிருப்பர். நான் அவருக்கு 'உத்தமச் சோழப் பல்லவர்' என்ற பட்டத் தையும் மனமார அளித்துப் பெருமைப் படுத்து கிறேன்" என்று கூறிச் சேக்கிழாருக்கு மாலையை யணிவித்தான்.

சேக்கிழாரும் முதலமைச்சர் பதவியைத் திறம் பட நடத்திவந்தார். ஒட்டக்கூத்தரும் சேக்கிழாரும்

ஒற்றுமையாக வாழ்ந்து வரலாயினர். முதல் அமைச்சர் செய்யவேண்டிய நாடு சுற்றும் தொழிலை யும் சேக்கிழார் செய்து முடித்தார். தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள கும்பகோணத்தை அடுத்த திருநா கேசுவரம் என்னும் சிவஸ்தலத்தைத் தரிசித்த சேக் கிழார் தமது தொண்டை நாட்டுக் குன்றத்தூரிலும் திருநாகேசுவரம் கோவிலைப் போன்ற ஒன்றை அமைக்க எண்ணி அமைத்தார். இன்றும் அக்கோ வில் இருக்கிறது.

அநபாயனது சபையில் தமிழ் நூல்களைப் பற்றிப் புலவர்கள் விவாதிப்பார்கள். இதையெல்லாம் சேக் கிழாரும் கேட்பதுண்டு. ஒரு சமயம் சமண மதத்தை விவரிக்கும் சீவகசிந்தாமணி என்ற நூலைப் புலவர் கள் படிக்கலானுர்கள். இதைக் கேட்டு அநபாயன் மகிழத்தொடங்கினன். இதைக்கண்ட சேக்கிழாரின் உள்ளம் குமுறியது; காரணம், வெறும் அரசனது சரித்திரம் கூறும் நூலே சிந்தாமணி. இப்பிறப்பில் இன்பத்தைத் தருவதேயன்றி மறுமைக்கு இன்பத் தைத் தராது என்பதே. இதைத் தம் மனத்துள் வைத்துக்கொள்ளாமல் அநபாயனது மகனும் இள வரசனுமாகிய இராஜராஜனிடம் கூறினுர்.

அதுகேட்ட இராஜராஜன். "இருமையும் இன் பம் பயக்கத்தக்க வரலாறுகளைக் கூறவேண்டும்" என்று சேக்கிழாரிடம் கேட்டார். சேக்கிழார் "நாயன் மார்களின் வரலாறுகளைக் கேட்டால் இருமையும் இன்பம் பெறலாம்," என்றுர். இதைச் செவியுற்ற அநபாயனும் மிக்க வியப்புற்று சேக்கிழாரிடம் வந்து "நீர் சொல்வது நல்லது; இந்நாயன்மார் வரலாறு களை யார் தொகுத்துத் தருவார்கள்?" என்று கேட்

டான். இதற்குச் சேக்கிழார், "நான் சொல்கிறேன்" என்று சொல்லி ஓர் அடியார் வரலாற்றைப் பாடினார். இதைக் கேட்ட அநபாயன் மகிழ்ந்து மற்ற அடியார்கள் வரலாறுகளையும் பாடவேண்டினான். இதற்குச் சேக்கிழார் "நான் தில்லை சென்று சிவபெருமானின் அருளைப் பெற்றுப் பாட முயல்வேன்" என்றார். அரசனும் அப்படிச் செய்ய உத்தரவளித்தான்.

தில்லையை யடைந்த சேக்கிழார் சிவபெருமானைத் தரிசித்தார். நடராஜப் பெருமானைக் கண்டு, "பெருமானே, சிறப்புடைய உன் அடியார்கள் வரலாறுகளை அடியேன் எப்படிப் பாடுவேன்? எனக்கு உமது அருளைத் தந்தருள்வீராக!" என்று வேண்டி நின்றார். அப்போது 'உலகெலாம்' என்ற சொல் சேக்கிழார் காதில் விழுந்தது. இதை இறைவனருளியதாகவே கொண்டு "உலகெலாம்" என்று செய்யுளைத் தொடங்கி 'உலகு' என்று அந்நூல் முடியும்படி பாடினார். ஓராண்டில் நூல் பாடியாயிற்று. அந்நூலுக்குத் திருத்தொண்டர் புராணம் என்று பெயர் இட்டார். அந்நூலை அநபாய சோழன், பெரும்புலவர்கள் முதலியோர்கள் சூழ, தில்லை நடராஜனின் திருக்கோவிலில் ஆயிரக்கால் மண்டபத்தில் அரங்கேற்றம் செய்வித்தான். இந்நூலைக் கேட்ட அனைவரும் ஆனந்தங் கொண்டனர்.

அநபாயன் சேக்கிழாரையும் அவர் பாடிய திருத்தொண்டர் புராணத்தையும் யானைமீது ஏற்றி ஊர்வலம் வரச்செய்தான்; தானே சேக்கிழாருக்குக் கவரி வீசினான். அரண்மனையை யடைந்தவுடன் சேக்கிழாருக்குத் 'தொண்டர்சீர் பரவுவார்' என்ற

பட்டத்தையும் அளித்தான். பல விலை மதிப்பற்ற ஆடை அணிகளையும் வழங்கிச் சிறப்புக்கள் பல செய்தான்.

அரும்பதவுரை

கோட்டம் - ஜில்லா, புகைவண்டி நிலயம் - இரயில்வே ஸ்டேஷன், தொலைவு - தூரம், மரபு - வமிசம்; திரிபு - ஒன்றை மற்றொன்றாகக் கொள்ளும் உணர்வு, புலமை - அறிவு, பணி - வேலை, திகழ்ந்தார் - விளங்கினார், வினா - கேள்வி, அரிது - எளிதன்று, மாண - மிகவும், ஞாலம் - உலகம், அவை - சபை, அமைச்சர் - மந்திரி, இருமை - இம்மை, மறுமை, செவியுற்ற - கேள்விப்பட்ட.

பயிற்சி

I கேள்விகள்

1. தமிழ் நாட்டை எத்தனை வகையாகப் பிரித்திருந்தனர் ?

2. சேக்கிழார் பிறந்த ஊர் எது ? அது சென்னையிலிருந்து எத்தனை மைல் தூரமுள்ளது ?

3. சேக்கிழார் என்றால் என்ன பொருள் ? இவரது இயற் பெயர் என்ன ?

4. சேக்கிழார் இளமையில் எவ்வாறு கற்றார் ?

5. அநபாய சோழன் யார் ? அவன் குண நலங்களை எழுதுக.

6. மூவருலா யார் மீது யாரால் பாடப்பட்டது ?

7. அநபாயன் கேட்ட வினாக்கள் எவை ?

8. வினாக்களைக் கேட்ட புலவர்கள் என்ன கூறிக் கொண்டனர் ?

9. சேக்கிழாரை அநபாயன் எங்ஙனமறிந்து அமைச்சராக்கினான் ?

10. அநபாயன் சேக்கிழாருக்கு அளித்த பட்டங்கள் யாவை ? ஏன் அளித்தான் ?

11. தில்லையில் சேக்கிழார் சிவபெருமானைத் தரிசித்தவுடன் கேட்டது என்ன?

II. கீழ்க் காணும் பதங்களை நும் சொந்த வாக்கியத்தில் வைத் தெழுதுக.

அமிழ்தினும், நம் முன்னோர், கோட்டம், புகை வண்டி நிலயம், இளமையிலிருந்து, ஓலைச்சுவடி, மனப் பாடம் செய்து, இயற் பெயர், வினுக்களைக் கேட்டு, திருப்பணிகளை.

இலக்கணம்

பகாப்பதம் — பகுபதம்

சில தமிழ்ச் சொற்களைப் பிரிக்க முடிவதில்லை. இச் சொல்லைப் பகாப்பதம் என்பர். பகா என்றால் பிரிக்க முடியாத, பதம் - சொல், என்பது பொருள்.

(உதாரணம்) கல், மண், தலை, நீர் என்பன.)

சில சொற்களைப் பிரிக்க முடிகிறது. இதனைப் பகு பதம் என்பர். பகு - பிரிக்கக்கூடிய, பதம் - சொல் என்பது பொருள். பகுபதத்தின் முக்கியமான பிரிவுகள் மூன்று. அவை பகுதி, விகுதி, இடை நிலை எனப்படும்.

பகுபதத்தின் முதலில் நிற்பது பகுதி. கடைசியில் நிற்பது விகுதி. இதன் இடையில் நிற்பது இடை நிலை.

(உ -ம்) உண்டான், கேட்டான் என்பன.

1. இதில் உண் பகுதி, ஆன் விகுதி, ட் இடை நிலை.

2. கேள் - பகுதி, ஆன் - விகுதி, ட் இடைநிலை.

2. இசைக்கலை

பண்டைக் காலத்தில் நம் தமிழ் நாட்டில் முச்சங்கங்களிலும், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் புலவர்கள் ஆராய்ச்சி செய்து வந்தார்கள். அவற்றுள் இயல்பாக அமைந்த தமிழ்ப் பாடல்களும் உரைநடைகளும், இயற்றமிழைச் சேர்ந்தவை. இராகத்துடன் சேர்த்துப் பாடப்படுவன இசைத் தமிழின் பாற்படும். கண்டோர் களிக்கப் பாத்திரங்களை அமைத்து, நடித்துப் பேசிக் காட்டப்படும் தமிழ், நாடகத் தமிழ் எனப்படும்.

இம் மூன்றனுள் இசைத் தமிழே சிறந்தது. பல மணிகள் சேர்க்கப்பட்ட ஆரத்தின் நடுவில் உள்ள நாயகமணிபோல், இயல், நாடகம் ஆகியவற்றின் நடுவே இசையை அமைத்ததாலேயே இதன் விழுப்பம் நன்ருக விளங்குகிறது. இத்தகைய மேன்மை வாய்ந்த இசையைக் கற்ரேரும், முடியுடை மூவேந்தர்களும் மற்றுமுள்ள அரசர்களும் தங்கள் தங்கள் அவைகளில் பொருளுதவி முதலியவைகளைச் செய்து ஆதரித்து வந்தார்கள். இன்னும் தஞ்சையில் அரண்மனைக் கட்டிடத்தில் சங்கீத மஹால் என்னும் ஓர் அழகிய பெரிய அறை இதற்குச் சான்ருக அமைந்துள்ளது. சிலப்பதிகாரம் முதலிய நூல்களில், இவ்விசையின் இலக்கணங்களைக் காணலாம். முற்காலத்தைப்போல் இப்பொழுது, அவ்வளவு வளர்ச்சியை இசைத் தமிழ் பெருவிடினும், ஆங்காங்குச் சில விடங்களில் இதன்

மேன்மை விளங்குகிறது. வரிப்பாட்டு, சிந்து, பள்ளு, கும்மி, கண்ணி முதலியவைகளும் இவ்விசையைச் சேர்ந்தவையே.

இசை, ராகம், பண் இவை ஒரு பொருட் சொற்கள். ராகம், ஜனகராகம் என்றும் ஜன்யராகம் என்றும் இருவகைப்படும். முதலுக்கு மேள கர்த்தா ராகம் என்று வேறு பெயரும் உண்டு. பண் என்பதற்கு, நரம்பு அல்லது ஸ்வரம் என்று பெயர், பண்ணிலிருந்து ஸ்வரம் பிறக்கும். வடமொழியில் ஏழு ஸ்வரங்களுக்கு, ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் எனப் பெயர். தமிழில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என இவை வழங்கப்படும். ஸ, ரி, க, ம, ப, த, நி என்பவை முறையே முற் கூரிய ஏழு ஸ்வரங்களுக்குரிய வடமொழி எழுத்துக் களாகும். தமிழில் நெட்டெழுத்துக்கள் ஏழும் ஏழு ஸ்வரங்களுக்கு உரியவையாக வழங்கப்படுகின்றன. ஜனக ராகத்திலிருந்து பிறப்பதால், மற்றது ஜன்ய ராகம் எனப் பெயர் பெற்றது. இப்பேர்ப்பட்ட ராகங் கள் எண்ணிலடங்கா. இவ்விசைகளைக் கருவிக ளோடு சேர்த்து அநுபவிப்பது தமிழர் மரபு. ஆகவே தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக் கருவி என்னும் நால்வகைக் கருவிகளைத் தமிழர் ஏற்படுத்திக் கொண்டார்கள். மத்தளம், முரசு, பேரிகை முதலியவை தோற் கருவியைச் சேர்ந்தவை யாகும். புல்லாங்குழல் முதலியன துளையொடு பொருந்தியிருப்பதால் அவைகளைத் துளைக்கருவிகள் எனக் கூறுகின்றனர். நரம்புகள் பொருந்திய கருவி கள் நரம்புக்கருவிகள் எனப்படும். யாழ், வீணை,

பிடில், தம்புரா முதலியவை நரம்புக்கருவிகள். வீணை வேறு, யாழ் வேறு; யாழ் வளைந்த வடிவுடையதாக இருக்கும். வெண்கலத்தால் செய்யப்பட்டவற்றிற்குக் கஞ்சக்கருவிகள் என்று பெயர். அவை சேகண்டி முதலியவை. யாழிற் பலவகை யுண்டு. அவை, சீறியாழ், பேரியாழ், செங்கோட்டுயாழ், சகோடயாழ், மகரயாழ் என்பனவாம். இவைகளுக்குள்ள நரம்புகளின் எண்ணிக்கையும் வரையறுக்கப் பட்டுள்ளது. ஆயிரம் நரம்புகள் கொண்ட யாழையும் தமிழர் வாசித்தார்கள் என்றும் தெரியவருகிறது.

'மதம் பிடித்த நளகிரி என்னும் யானை ஒரு சமயத்தில் பாகனுக்கு அடங்காமல் பலருக்குத் துன்பத்தை விளைவித்தது. இதையறிந்த உதயணன் தன்னிடம் வைத்திருந்த கோடபதி என்னும் யாழை வாசித்தான். அந்த யானை அவ்வின்னிசையில் மூழ்கி மெய்மறந்து அடங்கிற்று' என்ற செய்தியை நாம் பெருங்கதையால் அறியலாம்.

இரங்கற்பண் விளரி, 'மக்கள், தேவர், நரகர், அனைவரையும் அடக்கித் தன் வயப்படுத்திய தசவதனன் தன் உடல் வலிமையால் செருக்குற்றுக் கைலையங்கிரியைத் தன் இருபது கைகளால் பெயர்த்தெடுத்தான். அரனுடன் இருந்த பார்வதி அஞ்சினள். சிவபெருமான், நடப்பதைத் தெரிந்து கொண்டு, தன் கால் விரலால் அம் மலையை அழுத்தினர். மலை அழுந்தத் தொடங்கவே, பாரத்தைத் தாங்க முடியாத அரக்கர் கோமான், தன் பிழையை அறிந்தான். உடனே தன் தலையொன்றை யறுத்து, அதையே யாழாக்கி, ஸாமகானத்துடன் வாசித்

தான்' என்று உத்தர இராமாயணம் என்னும் அரிய நூல் கூறுகிறது.

நாரதர் என்னும் மகரிஷிக்கு வீணையிடம் மிக்க பிரியம் உண்டு. தேவகிக்கு மகனுய்ப் பிறந்து, யசோதையிடம் ஒளித்து வளர்ந்த, கிருஷ்ண பரமாத்மா புல்லாங்குழல் வாசிப்பதில் வல்லவர் என்பது, **"கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி'** என்னும் சிலப்பதிகார அடியால் அறியலாம். இறைவன் குழலோசையைக் கேட்டு, புற்களையுண்ட பசுக்கள், மயங்கி அசைவற்று அவனை உற்று நோக்கிக் கொண்டிருந்தனவாம்.

தொட்டிலில் அழுதுகொண்டிருக்கும் பாலர்கள் இனிய தாலாட்டுப் பாட்டுக்களைக் கேட்டு உறங்கு கின்ருர்கள் என்பது உலகமறிந்ததே. அதேபோல் பாதையைச் சீர்படுத்தல், கிணறு தோண்டுதல் முதலிய பற்பல செயல்களையும் புரியும் ஆண் பெண் கள் அனைவரும் தங்கள் உடல் வருத்தம் தெரியாம லிருப்பதற்காகப் பாடிக்கொண்டே அவற்றைச் செய்வார்கள்.

அசுணமா, என்னும் பறவை பறையின் கொடுஞ் சத்தத்தைக் கேட்டால் உயிர் வாழாது, என்று "பறைபட வாழா அசுணமா' என்னும் ஆன்ருேர் பாடலால் அறிகிருேம். திருவிழாக் காலங்களில் பறை கொட்டுவார்கள். ஒருவர் இறந்த காலத்தில் கொட்டப்படும் பறைக்குச் சாப்பறை என்று பெயர்.

போர்முரசு, வெற்றிமுரசு, மங்கல முரசு என முரசு மூன்று வகைப்படும். போருக்குச் செல்லும்

போது போர் முரசை அடிப்பார்கள். வாகைமாலை சூடி வெற்றியோடு அரசன் வரும் தருணத்தில், வெற்றி முரசு கொட்டப்படும். சுப காலங்களில் மங்கல முரசு பயன்படுகின்றது. இதேபோல் பற்பல கருவிகளை இசைக் கேற்பப் பயன்படுத்தினர் நம் பண்டைத் தமிழர்கள்.

அரும்பதவுரை

முச்சங்கங்கள் - மூன்று சங்கங்கள், களித்தல்-மகிழ்ச்சி யடைதல், விழுப்பம் - சிறப்பு, அவை - சபை, சான்று - சாட்சி, ஜனகம் - காரணம், ஜன்யம் - காரியம், கஞ்சம் - வெண்கலம், மெய் - உடல், அந்நியர் - அயலார், மாதர் - பெண்டிர், செருக்கு - கர்வம், அரன் - சிவன், அரக்கர் கோமான் - இராட்சதர்களுக்கு அரசன், தசவதனன் - பத்து முகங்கள் கொண்ட ராவணன், கிரி - மலை, கானம் - பாட்டு.

பயிற்சி

I கேள்விகள்

1. முத்தமிழ் என்றால் என்ன ?
2. இசைத் தமிழின் சிறப்பை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. ஏழு ஸ்வரங்களுக்குரிய எழுத்துக்கள் யாவை ?
4. கருவிகள் எத்தனை வகைப்படும் ?
5. யாழைப்பற்றி பெருங்கதையால் நீ அறிவது யாது ?
6. புல்லாங் குழலின் சிறப்பைச் சுருக்கி எழுது.
7. முரசு எத்தனை வகைப்படும் ? அவை எவ்வெக் காலங்களில் உபயோகப் படுகின்றன ?

II. கீழ்க்கண்ட சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைக்க.

மேன்மை வாய்ந்த, சான்றாக, சேர்த்து, இசையில் மூழ்கி, ஓசையைக் கேட்டு, தருணத்தில், எண்ணிக்கை, அநுபவிப்பது.

இலக்கணம்

முதல் பிரிவில் அறுவகைப் பெயர்களைப் படித்தீர்கள் அல்லவா? அதில் குணப் பெயர் தொழிற்பெயர் இரண்டையும் அறிவதற்கு விகுதிகள் உண்டு. குணப்பெயரின் விகுதியாகப் பெரும்பாலும் 'மை' விகுதி வரும். தொழிற் பெயருக்குத் தல், அல், அம், கை, பு, சி என்பன விகுதிகளாக வரும்.

(உ-ம்) குணப்பெயர் : நன்மை, தீமை, செம்மை, கருமை, வெண்மை, சேய்மை, அண்மை என்பன.

,, தொழிற்பெயர் : நடத்தல், படித்தல், ஓட்டம், ஆட்டம், உடுக்கை, படுக்கை, காப்பு, நட்பு, பயிற்சி, தேர்ச்சி.

3. நானிலம்

பண்டைக் காலத்தில் நமது தாயகத்தை முடியுடை மூவேந்தர்கள் அரசாட்சி செய்து வந்தார்கள். அவர்கள் தமிழ் மொழியில் மிகுந்த பற்றுடையவர்கள். பல தமிழ்ப் புலவர்களை ஆதரித்து, அவர்களின் வாயிலாய்ப் பல அரிய நூல்களைச் செய்வித்துள்ளார்கள். இத்தகைய தமிழ்க் கருவூலங்களாக உள்ள புலவர்கள் வாழ்ந்த காலத்தையே சங்க காலம் எனக் கூறுகின்றனர்.

சங்க காலத்தில் இயற்றப்பட்ட நூல்கள் சங்க நூல்கள் எனப்படும். தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்று மூன்று சங்கங்கள் ஒன்றன் பின் ஒன்ருய்த் தோன்றின. இக்காலத்தில் கடைச் சங்கநூல்களையே சங்க நூல்கள் என்று சொல்லுகின்றனர். ஏனைய சங்ககால நூல்கள் அழிந்து போயின.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்று தொகுக்கப்பட்டுள்ள பதினெட்டு நூல்களே சங்க நூல்களாகும். இந்நூற் பாக்களில் இவற்றை இயற்றிய புலவர்களின் இயற்கையோடியைந்த வாழ்க்கை தெரியவருகிறது.

தமிழ் மக்கள் நிலத்தின் இயற்கைத் தன்மைக்கேற்ப அதைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று நான்கு பகுதிகளாகப் பிரித்துள்ளார்கள். நானிலம் என்ற பெயரும் நிலத்திற்கு இக்காரணத்தாலேயே இடப்பட்டுள்ளது. இந்நிலங்களிற் காணும் பொருள்களைக் கொண்டே அந்தந்த நிலத்தின் நிகழ்ச்சிகளை அழகாக வருணித்துப் புலவர் கூறுவர்.

மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படும். இதை மலநாடு என்றும் கூறுவது உண்டு. இங்குக் குறிஞ்சிப்பூ மிகுதியாக இருப்பதால் குறிஞ்சி என மக்கள் பகர்கின்றனர். இந்நில மக்களின் தெய்வம் முருகன். இவர்கள் குறவர், குன்றவர் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள். யானை, புலி முதலிய துஷ்டமிருகங்களை வேட்டையாடிக் கொன்று அவற்றின் ஊனைத் தின்பார்கள். தினை விதைத்தல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல் முதலியவை இவர்களுடைய தொழில்களாகும்.

காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லை எனப்படும். இந்நிலக் கடவுள் திருமால் ஆவர். இந்நில மக்கள் ஆயர் எனப்படுவர். இவர்களை இடையர் என்றும் அழைப்பதுண்டு. ஆக்கல், அளித்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களில் இடைத்தொழிலாகிய அளித்தலைச் செய்யும் திருமாலை இவர்கள் வழிபடுவதால் இவர்களுக்கு இப்பெயர் வந்தது. இங்கே பசு, எருமை, நீர்நாய் முதலிய விலங்குகள் உண்டு. இவர்கள் ஆடு மாடுகளை மேய்த்து அவற்றின் மூலம் கிடைக்கும் பால், நெய், தயிர் முதலியவற்றை விற்று ஜீவனம் செய்வார்கள். முல்லை மலர்களின் மிகுதியால் முல்லை என இந்நிலத்திற்குப் பெயரிட்டார்கள். இந்நிலத்தில் ஏறு தழுவுதல் என்னும் வீர விளையாட்டு நடைபெறும். இதனை மஞ்சி விரட்டு என்றும் கூறுவர். இடையர்கள் காளைகளை நன்கு வளர்த்து நாற்புறமும் வேலியிட்ட ஒரு பரந்த வெளியில் விடுவார்கள்.

இவற்றுடன் மண்டியிட்டுச் சண்டை புரிந்து, அக் காளைகளை அடக்கும் வாலிபர்களுக்கே மணப் பெண் மாலையிடுவாள். இதனுல் மணமகன் வீரம் தோன்றும். இத்தகைய ஏறு தழுவுதல் கலித்தொகை என்னும் நூலிலுள்ள முல்லைக்கலி யில் அழகாக வருணிக்கப்பட்டுள்ளது.

நிலமும் நிலத்தைச் சார்ந்த இடமும் மருதம் எனப்படும். இதை வயல் நாடு என்றும் கூறுவர். இந்நிலத்திற்குக் கடவுள் இந்திரன். இவனுக்குப் போகி என்று மற்ருெரு பெயரும் உண்டு. ஆகவேதான் பொங்கற் பண்டிகைக்கு முன் ஞளில் மருத நிலமக்கள் போகிப் பண்டிகை கொண்டாடுகின்றனர். சிலப்பதிகாரம் என்னும் நூலில் காவிரிப்பூம்பட்டினத்தில் இருபத்தெட்டு தினங்கள் இந்திர விழாக் கொண்டாடியதாகக் காணப்படுகிறது. பயிருக்கு இன்றியமையாதது மழை. அம்மழைக்குரிய கடவுளான இந்திரனை வழிபட்டால் மழை பொழியும் என்று இவ்விழா வைச் செய்கிருர்கள். இந்நிலத்தில் உழவர்கள் வசிப்பார்கள். அவர்கள் நெல்லை விளைவித்து வாழ் வார்கள். கழுநீர், தாமரை முதலிய மலர்கள் நீர்நிலை தோறும் பூத்துப் பொலியும். காஞ்சி, மருதம் முதலிய விருட்சங்கள் வானுற ஓங்கி, வளர்ந்து நிற்கும். எருமை முதலிய விலங்குகளும், அன்னம், நீர்க்கோழி முதலிய பறவைகளும் சந்தோஷத் துடன் வாழும். எருமைகள் குளங்களில் படிந்து தோணிபோல் காட்சியளிக்கும். மீன்களின் வருகையைப் பார்த்தவண்ணம் நாரைகள் தவம் செய்யும்; இப்பேர்ப்பட்ட அழகிய மருத நிலக்

காட்சிகளைச் சங்க நூல்களால் அறியலாம். மருத மரங்கள் மிகுதியாக இருப்பதால் மருதம் என இப்பகுதிக்குப் பெயர் வந்தது.

கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தல் எனப்படும். இந்நிலக் கடவுளுக்கு வருணன் என்பது பெயர். இந்நில மக்கள் பரதவர் எனப் படுவர். இவர்கள் மீன் பிடித்தும் உப்பு வாணிகம் செய்தும் வாழ்க்கையை நடத்துவார்கள். இங்குத் தாழை, முண்டகப்பூ முதலிய பூக்கள் காட்சியளிக்கும். மீன் பிடிக்கும் செம்படவரைப் பரதவர் என்றும், உப்பு வாணிகரை உமணர் என்றும் அழைப்பர். சுருமீன் முதலிய பெரிய மீன்கள் கடலில் வாழும். சிற்சில சமயங்களில் மீன் பிடிக்கச் சென்ற பரதவர்கள் கடலிலேயே இறப்பதும் உண்டு. இறந்தவர்களை நினைத்து அவர் தம் மனைவியர் இரங்குவர். புலவர்கள் இதனாலேயே நெய்தல் நிலத்தின் உரிப் பொருளாக இரங்குதலை அமைத்துள்ளார்கள். நெய்தலைப்பற்றி எட்டுத் தொகையைச் சேர்ந்த கலித்தொகையில் அழகாகக் கூறப்பட்டுள்ளது.

அரும் பதவுரை

பண்டைக் காலம்-பழைய காலம், தாயகம்-தாய் நாடு, பற்று-ஆசை, வாயில்-வழி, கருவூலம்-நிதி, தலைச்சங்கம்-முதற் சங்கம், இயைந்த-பொருந்திய, பகர்தல்-சொல்லுதல், அகழ்தல்-தோண்டுதல், அளித்தல்-காப்பாற்றுதல், இன்றியமையாதது-அவசியமானது, விருட்சம்-மரம், ஊன்-இறைச்சி.

பயிற்சி

I. கேள்விகள்

1. சங்க நூல்கள் என்றால் என்ன ?

2. நானிலம் எனப் பெயர் வரக்காரணம் யாது ?

3. குறிஞ்சி நிலக் காட்சிகளை விவரிக்க.

4. முல்லை நிலக் காட்சிகளைச் சுருக்கிக் கூறு.

5. முல்லையைப் பற்றிக் கலித் தொகையில் யாது கூறப்பட்டுள்ளது ?

6. மருத நிலக் காட்சிகளைப் பற்றி ஓர் குறிப்பு வரைக.

7. வருணன், பரதவர், சுறுமீன், தாழை இவை எந் நிலப் பொருள்கள் ?

II. பின் வரும் பதங்களை உங்கள் சொந்த வாக்கியத்தில் வைத்தெழுது.

பண்டைக் காலம், பற்றுடையவர்கள், கருவூலங்கள், ஒன்றன் பின் ஒன்றாய், தன்மைக்கேற்ப, இன்றியமையா தது, ஏறு தழுவுதல்.

இலக்கணம்

இடுகுறிப் பெயர்—காரணப் பெயர்

பெயர்ச் சொற்களில் சில காரணமில்லாமல் ஏற்பட்ட வையாயுள்ளன. சில சொற்கள் காரணங்களையுடையனவா யிருக்கின்றன. காரணமில்லாத பெயரை இடுகுறிப் பெயர் என்றும் காரணமுள்ளவற்றைக் காரணப் பெயர் என்றும் வழங்குவர்.

(உ-ம்) மண், கல், மலை, மரம் முதலியன. இவை ஒரு காரணமுமின்றி ஏற்பட்டனவாதலாலும் முன்னோர்கள் இட்ட பெயராதலாலும் இவற்றை இடுகுறிப் பெயர், என வழங்கினர்.

(உ-ம்) அணி-உடை முதலியன. இவை அணியப் படுதல், உடுக்கப்படுதல் என்னும் காரணம் பற்றி வருவதால் காரணப் பெயர்களாயின.

நாற்காலி-நான்கு கால்களையுடையது.

4. கண்ணகி

தமிழணங்கின் திலகமெனத் திகழ்வது சோழ நாடு. இதில் பொன்னிநதி பாய்ந்து சோழ மன்ன ரது சிறப்பையும் புகழையும் மேலோங்கச் செய்தது. சோணாடு நில வளங்களுடையது. பல சான்றோர் களுக் குணவை யளிப்பது. இதனையே தமிழ் மூதாட்டி, "சோழ வளநாடு சோறுடைத்து," என்று புகழ்வாராயினர். இந்நாட்டின் பழைய தலைநகரம் காவிரிப்பூம்பட்டினமாகும். இதில் கரிகால் வளவன் என்பான் ஆட்சி புரிந்து வந்தான். இக்காலத்து வணிகப் பெருங்குடிகளில் தலைசிறந்தவர்களாய் மாசாத்துவான், மாநாய்கன் என்ற இரு பெருஞ் செல்வர்கள் வாழ்ந்தனர்.

இவ்விருவரும் குலத்திலும் செல்வத்திலும் ஒப் பானவர்கள். மாசாத்துவானுக்குக் கோவலன் என்று ஒரு மகன் இருந்தான். மாநாய்கனுக்கும் கண்ணகி என்று ஒரு மகள் இருந்தாள். இவ்விரு வருக்கும் தக்க பருவம் வந்ததனால் பெற்றோர் மண முடிக்க எண்ணினர். மாசாத்துவான் மாநாய்கன் இருவரும் ஒரு நிகருடையவராதலால், கோவலன் கண்ணகி ஆகிய இருவருக்கும் மணம் முடித்து விடு வதாக எண்ணி மணத்தை முடித்தனர். கோவலன் கண்ணகி இருவரும் ஈருடலும் ஓருயிருமாய் இல்ல றம் நடாத்தி வருவாராயினர்.

இங்ஙனம் இவ்விருவரும் இல்லறத்தை நடாத்தி வரும் நாளில் அவ்வூரில் மாதவி என்னும் நாடகக் கணிகை ஒருத்தி வாழ்ந்து வந்தாள். இவள் இசை

யிலும் நடனத்திலும் கைதேர்ந்தவள். இவள் ஒரு நாள் கரிகாலனது அவையில் நடன அரங்கேற்றத் திற்கு நடனமாடினுள். இதன் பொருட்டு ஊர் மக்கள் ஒன்று கூடிச் சென்றனர். அவருள் ஒருவன் கோவலன். இவன் மாதவியினது ஆடலிலும் பாட லிலும் நாட்டம் கொண்டு அவளிடம் வாழ விரும்பி ஞன். மாதவியும் அதற்குடன்படவே இருவரும் பூவும் மணமும்போலப் பிரியாது வாழ்ந்து வருவாரா யினர்.

இவ்வாருகக் கணவனைப் பிரிந்த கண்ணகி உடலைப் பேணுமலும், உணவு உட்கொள்ளாமலும், உறக்கங் கொள்ளாமலும் ஏங்குவாளாயினள். ஆயினும் இதை வெளிக்காட்டாமலிருந்து வந்தாள். கோவலன் இவளைப்பற்றி எண்ணங்கொள்ளாது செல்வங்கள் எல்லாவற்றையும் மாதவியிடம் கொடுத்து வாழ்ந்து வருவாஞயினன்.

சோழ நாட்டில் ஆண்டு தோறும் இந்திரன் பொருட்டு விழா நடத்துதல் வழக்கம். இதை ‘இந்திர விழா’ என்பர். காவிரிப்பூம்பட்டினத்தில் இவ்விழாவினைக் கொண்டாடும் நாள் வந்தது. நகர மாந்தரனைவரும் ஆடை அணிகலன்களால் தங்களை அழகு செய்துகொண்டு கடற்கரைக்குச் சென்றனர். கோவலனும் மாதவியுடன் கடற்கரைக்குச் சென் ருன். அங்கு ஒரு தனியிடத்திலமர்ந்து இருவரும் வீணை மீட்டிப் பாடி மகிழ்வாராயினர். இங்ஙனம் பாடுங்காலத்தில் கோவலன் வேருெரு மகளிர் மேல் விருப்புடையதுபோல ஒரு பாட்டைப் பாடினுன். ஆனல் கோவலனது உள்ளத்தில் அத்தகைய


எண்ணமில்லை. ஆயினும் ஊழ்வினையால் அக்கருத்துடைய பாடலைப் பாடினன். இதைக் கேட்ட மாதவியும் தானும் வேருேர் ஆடவன் மேல் விருப்புடையவள்போல் பாடினள். இதைக் கேட்ட கோவலனுக்குச் சீற்றம் அதிகரித்தது. உடனே அவ்விடத்தை விட்டு நீங்கிக் கண்ணகியின் இல்லத்தையடைந்தான்.

கோவலன் வந்ததைக் கண்ட கண்ணகி மிகவும் மகிழ்ச்சி கொண்டு அவனை வரவேற்று உபசரித்தாள். கோவலனும் தான் செய்த தவறை உணர்ந்து, "பெண்ணணங்கே! உனக்கு நான் பெருந் தீங்கை விளைவித்து விட்டேன். என் செல்வமெல்லாம் மாதவியோடு கூடி இழந்தேன். இப்போது வறியனுனேன். இது எனக்கு மிகவும் வெட்கத்தைத் தருகிறது," என்ருன். இதைக் கேட்ட கண்ணகி, 'மாதவிக்குப் பொருள் கொடுக்க இயலாமையால் இங்ஙனம் கோவலன் வருந்துகின்றனன் போலும்,' என்றெண்ணி "நாயக, அடியாளிடம் இரண்டு சிலம்புகள் உள்ளன. அவற்றைக் கொண்டருள்க," என்றனள். இதைக் கேட்ட கோவலன், "அவ்வாருயின் இச்சிலம்புகளை முதலாகக் கொண்டு, இந்நாட்டை விட்டுப் பாண்டி நாடு சென்று வாணிபம் செய்து இழந்த பொருளை மீட்டும் பெற எண்ணுகிறேன். இதற்கு நீயும் என்னுடன் வருக," என்ருன். கண்ணகியும் உடன்படவே இருவரும் மதுரைக்குப் புறப்பட்டனர்.

கோவலனும் கண்ணகியும் பிறரெவரும் அறியாதபடி விடியற்காலத்தே காவிரிப்பூம்பட்டினத்

தைவிட்டுக் கால் நடையாகக் காவிரியின் வடகரை வழியாகச் சென்றனர். போகுங்காலத்துச் சமணத் துறவி கவுந்தியடிகளின் தொடர்பும் ஏற்பட்டது. மூவரும் மதுரையை யடைந்தனர்.

மதுரை யடைந்ததும் ஆயர்குல மாதாகிய மாதரி என்பாளின் இல்லத்தில் கோவலன் கண்ணகி



இருவரும் உறைவாராயினர். மாதரி என்பவள் இவர்களுக்கு வேண்டும் பொருள்களைக் கொடுத்து உதவித் தன் மகள் ஐயை என்பாளையும் அவர்களுக் குத் துணையாக இருக்கச் செய்தனள். அன்று உணவு உண்டு மகிழ்ந்தனர். கோவலன் கண்ணகி யிடமிருந்து சிலம்பொன்றை வாங்கிக்கொண்டு மதுரை நகருக்குள் கடைவீதியில் சிலம்பை விற்கச் சென்றான்.

கோவலன் மதுரையின் கடைவீதியே செல்லுங்காலத்தில் அவனெதிரில் அரண்மனைப் பொற்கொல்லன் வந்தான். இவனைக் கண்ட கோவலன் 'இவன் அரசனால் தகுதி பெற்றவன் போலும்,' என்று எண்ணி அவனிடம் சென்று "என்னிடம் அரசமா தேவியார் அணிதற்குரிய சிலம்பொன்றுளது, நீ அதை விலைக்குப் பெற்றுக்கொள்வாயா"—என்றான். இதைக் கேட்ட பொற்கொல்லன், "நான் விலைக்கு வாங்கிக் கொள்கிறேன்," என்று உடன்பட்டான். பொற்கொல்லன் கோவலனை ஓரிடத்தில் இருத்திவிட்டுப் பாண்டியனிடம் வந்தான்.

அப்பொற்கொல்லன் அரசமா தேவியின் சிலம்பைத் திருடியவன். தான் திருடன் என்று அரசன் அறிவதற்கு முன்னாலேயே வேறு எவர் மீதாகிலும் அக்குற்றத்தைச் சாட்டிவிட வேண்டும் என்று எண்ணமிட்டிருந்தான். கோவலன் தானாகச் சென்று சிலம்பைப் பற்றிச் சொல்லியது அவனுடைய எண்ணத்தை நிறைவேறச் செய்வதாயிற்று. இதை எண்ணி, கோவலனிடம், "இச்சிலம்பை வாங்கக்கூடியவன் அரசனே; அவனிடம் சென்று இதைக் காட்டி வருமளவும் நீ இங்கிருப்பாயாக," என்று சொல்லி, அரண்மனையை நோக்கிச் சென்றான்.

அரண்மனையில் பாண்டியன் நெடுஞ்செழியன் தன் மனைவியின் கோபத்தைத் தணிக்க அந்தப்புரம் சென்று கொண்டிருந்தான். அப்போது பொற்கொல்லன், " அரசருள் ஏறே ! கன்னக்கோல் முதலிய கருவிகளில்லாமல் அரசமாதேவியின் சிலம்பைத் திருடிய கள்வன் அடியேன்

இல்லத்திலிருக்கிறான்" என்று கூறினான். இதைக் கேட்ட பாண்டியன் காவலாளர்களை அழைத்து, "இப்பொற்கொல்லன் கூறும் கள்வனிடம் என் மனைவியின் சிலம்பு இருக்குமாயின் அவனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வருக." என்று ஆணையிட்டான்.

பொற்கொல்லன் தன் எண்ணம் நிறை வேறியதைக் குறித்து மகிழ்ந்து காவலருடன் கோவலன் இருக்குமிடத்தை யடைந்தான். காவ லாளர்க்குக் கோவலனைக் காட்டி, "இவனே கள்வன், அரசரது ஆணைப்படி இவனைக் கொல் லுங்கள்," என்றான். கோவலனது தோற்றத்தைக் கண்ட காவலாளர், அவனைக் கொல்லத் தயங்கி னர். எனினும் ஒரு கொலைபாதகன் கோவலனை வெட்டி வீழ்த்திச் சிலம்பைக் கொண்டு சென்றான்.

கோவலன் கொலை செய்யப்பட்ட செய்தி ஊர் முழுவதும் பரவியது; ஆயர் சேரியில் இருந்த கண்ணகியும் அறிந்தாள். அவள் நடு நடுங்கிச் செயலற்று வீழ்ந்தாள்; அழுதாள். "வாழ்வதற்காக வந்த இடத்தில் இங்ஙனம் நேரிட் டதே" என்று புலம்பினாள். சூரியனைப் பார்த்து, "செங்கதிர்ச் செல்வனே ! நீ யறிய என் கணவன் கள்வனோ ? " என்றாள். சூரியனும், "நின் கண வன் கள்வன் அல்லன்; அவனைக் கள்வன் என்ற இவ்வூரை விரைவில் தீ யுண்ணும்," என்று அசரீரியாகக் கூறினன்.

உடனே கண்ணகி தான் வைத்திருந்த மற் றொரு சிலம்பை எடுத்துக்கொண்டு பாண்டிய

ணின் அரண்மனைக்குச் சென்றாள். காவலரிடம் தன் வரவை அரசனிடம் கூறி அனுமதி பெற்று உள்ளே சென்றாள்; அப்போது அவளைக் கண்ட



நெடுஞ்செழியன்: "நீ யார்? ஏன் அழுது கொண்டு இருக்கிறாய்?" என்றான். உடனே கண்ணகி "ஒரு புறாவின் பொருட்டுத் தன்னுடலைத் தந்த சிபியும், பசுவின் கன்றைக் கொன்ற தன் மகன்மீது தேரை ஓட்டி நீதி வழங்கிய மனுநீதிச் சோழனும் ஆட்சி செய்த புகார் நகரமே என் ஊர்; அவ்வூரில் வணிகனாயிருக்கும் கோவலன் சீவனம் செய்ய வேண்டி மதுரைக்கு வந்து உன்னால் கொலை செய்யப்பட்டான்; அவனது மனைவியே யான். என் பெயர் கண்ணகி"-என்று கூறினாள். இவள் கூறியதைக் கேட்ட பாண்டியன் "கள்வனைக் கொல்லுதல் கடுங்கோல் அல்லவே" என்றான். இதனைக் கேட்ட கண்ணகி, "அறநெறி அறியா அரசே!

என்னுடைய சிலம்பினுள் இருக்கும் பரல் மாணிக்கம்'' —என்ருள். பாண்டியன், "என் தேவியின் சிலம்பினுள் இருக்கும் பரல் முத்து,'' என்ருன். உனே கோவலனிடம் கைப்பற்றிய சிலம்பைக் கொணருமாறு உத்தரவளித்தான். அதனைக் கொண்டுவர அதைக் கண்ணகி வாங்கி உடைத்தாள்.

அச்சிலம்பினுள்ளிருந்து மாணிக்கப் பரல் பாண்டியனின் வாயடியில் தெறித்து வீழ்ந்தது. மாணிக்கத்தைக் கண்ட பாண்டியன் தன் தவற்றை யுணர்ந்து,

''பொற்கொல்லன் வார்த்தையைக் கேட்ட யானே [அரசன் !
நானே கள்வன் ! பாண்டியர் மரபில் கொடுங்கோல [ஞனவன்
நானே ! என் ஆயுள் கெடுக''

என்று கூறி இறந்தான். இதைக் கண்ட பாண்டியன் மனைவி கோப் பெருந்தேவியும் கணவன் பிரிவுக்காற்ருது உடன் இறந்தனள்.

அரண்மனையை விட்டு நீங்கிய கண்ணகி, "என் கணவனைக் கள்வன் என்று கூறிய இவ் ஆரைத் தீயுண்ணட்டும்,'' என்றனள். கற்புக்கரசியின் கூற்றுப்படியே மதுரையைத் தீ அழித்தது.

பின்னர் கால்நடையாகக் கண்ணகி வையையாற்றின் வழியே சென்று மலை நாட்டையடைந்தாள். அங்கு நெடுவேள் குன்றம் என்ற மலை மீது ஏறி வேங்கைமர நிழலில் நின்ருள். அப்

போது தேவவுருவில் வந்த கோவலனைக் கண்ணகி கண்டு மகிழ்ந்து விமானம் ஏறி விண்ணுலகம் அடைந்தாள்.

இந்நிகழ்ச்சியைக் கண்ட வேடுவர்கள் சேர அரசனான செங்குட்டுவனிடம் கூறினர். இதைச் செங்குட்டுவன் கேட்டு வியந்து சாத்தனார் வாயிலாகக் கண்ணகியின் வரலாற்றனைத்தும் அறிந்தான். உடனே நம் நாடு நோக்கி வந்த கண்ணகிக்குக் கோயில் கட்டிப் படிவம் சமைக்க வேண்டும் என்று எண்ணி இமயத்தினின்று கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டிப் படிவம் சமைத்துக் கோயிலில் பிரதிஷ்டை செய்தான்.

இந் நிகழ்ச்சி யனைத்தையும் சிலப்பதிகாரம் என்னும் தமிழ்க் காப்பியம் நன்கு விவரித்துக் கூறுகிறது. இது சேரவரசன் செங்குட்டுவனின் தம்பி இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது.

அரும் பதவுரை

திகழ்வது - விளங்குவது, பொன்னி - காவிரி, தமிழ் மூதாட்டி - ஔவையார், நாட்டம் - ஆசை, பேணாமல் - பாதுகாவாமல், துய்த்து - அனுபவித்து, இல்லம் - வீடு, வாணிபம்-வியாபாரம், உறைவார்-வசிப்பார், கள்வன்-திருடன், அநுமதி-உத்தரவு, கூற்று-வார்த்தை, வேடுவர்கள்-வேட்டையாடுபவர்கள்.

பயிற்சி

I. கேள்விகள்

1. சோழ நாட்டின் சிறப்பு யாது?

2. கோவலன் கண்ணகியின் பெற்றோர் யார்? எந்தக் குடியைச் சேர்ந்தவர்கள்?

3. கோவலன் மாதவியிடம் ஏன் சென்ருன் ?

4. இந்திர விழா எங்கு நடைபெற்றது ? நகரமாந்தர் அப்போது என்ன செய்வர் ?

5. கடற்கரையில் கோவலன் ஏன் மாதவியை விட்டகன்ருன் ?

6. கோவலனைக் கண்ட கண்ணகி என்ன செய்தாள் ?

7. கோவலன் கண்ணகி இருவரும் ஏன் மதுரைக்குச் சென்றனர் ? எவ்வழியாகச் சென்றனர் ? அவர்களுக்குத் துணையாக வந்தவர் யார் ?

8. மதுரையில் கோவலன் கண்ணகி இருவரும் முதலில் எங்குத் தங்கினர் ?

9. கோவலனைக் கண்ட பொற்கொல்லன் முதலில் என்ன சொன்னுன் ?

10. பொற்கொல்லன் செய்த வஞ்சகம் என்ன ?

11. கோவலனை ஏன் கொலை செய்தனர் ? யார் ?

12. கொலையுண்டதைக் கேட்ட கண்ணகி சூரியனைப் பார்த்து என்ன கேட்டாள் ?

13. பாண்டியனிடம் கண்ணகி என்ன கேட்டாள் ?

14. கோவலன் கண்ணகி ஆகிய இருவரின் வரலாற்றைக் கூறும் நூல் எது ? அது யாரால் இயற்றப்பட்டது ?

II. கீழுள்ள பதங்களை நும் சொந்த வாக்கியத்தில் வைத்தெழுது.

பொன்னி நதி, நிலவளங்கள், தமிழ் மூதாட்டி, குலத்திலும் செல்வத்திலும், தக்க பருவம், இல்லறம் நடாத்தி, அரங்கேற்றம், நாட்டம் கொண்டு, நகரமாந்தர், ஆடையணிகலன், உணவு உண்டு, கடுங்கோலன்று.

இலக்கணம்

தன்மை, முன்னிலை, படர்க்கை என்று மூன்று இடங்கள் உண்டு என்பதை அறிவீர்கள். இவை பற்றி வரும் பெயர் களும் உண்டு. அவை தன்மைப் பெயர், முன்னிலைப் பெயர், படர்க்கைப் பெயர் என்று வழங்கப்படும்.

(உ-ம்) நான், நாம், யான், யாம் என்பன தன்மைப் பெயர்கள். நீ, நீர், நீங்கள் என்பன முன்னி லைப் பெயர்கள். அவன், அவள், அவர்கள், என்பன படர்க்கைப் பெயர்கள்.

முன்பு வினைச் சொல் மூவகைப்படும் என்பதைப் படித் தீர்கள் அல்லவா? அவ்வினைமுற்று இறந்த கால வினைமுற்று, நிகழ்கால வினைமுற்று, எதிர்கால வினைமுற்று என்று மூவகைப்படும். இவ்வினைமுற்று திணை, பால், இடம், காலம் ஆகியவற்றைத் தெரிவிக்கும்.

(உ-ம்) நடந்தான், பார்த்தான், ஓடினுன் என்பன இறந்தகால வினைமுற்றுக்கள்.

நடக்கிறேன், பார்க்கிருன், ஓடுகிருர் என்பன நிகழ்கால வினைமுற்றுக்கள்.

நடப்பேன், ஓடுவான், பாடுவார் என்பன எதிர் கால வினைமுற்றுக்கள்.

5. ஆனந்தரங்கப் பிள்ளை

‘தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதி லார்—தோன்றலிற் ரோன்றாமை நன்று,’ என்பது ஆன்றோர் அமுத மொழியாகும். இம் மொழிக்கிலக் காக, வளம் பொருந்திய நம் தாயகத்தின் புதல்வர் களாகச் செந்தமிழ்ப் புலவர்களும், வரையாது வழங் கும் பல வள்ளல்களும் மின்னல் போலத் தோன்றித் தோன்றி மறைந்தனர். அவர்கள் இறந்த போதிலும் அவர்கள் நல்லிசை இன்றும் மக்களால் போற்றப் பட்டு வருகின்றது. அத்தகைய வள்ளல்களில் புதுவை ஆனந்தரங்கப் பிள்ளையும் நனி சிறந்தவர் ஆவர்.

நம் பாரத நாடு பல்லாண்டுகளாக நம் சொந்த நாட்டு அரசாட்சிக்குட் பட்டதாகவே இருந்து வந்தது. கி. பி. 16-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத் தில் பிரெஞ்சுக்காரர், போர்த்துகிசியர், ஆங்கிலே யர்கள் முதலிய அந்நிய நாட்டவர்கள் நம் நாட்டை ஆட்சி புரிவதற்காக முயற்சி செய்ய ஆரம்பித் தார்கள். இந்தக் காரணத்தால் அவர்களுக்குள் போர் தொடங்கியது. அதன் வாயிலாகப் பல துன் பங்களை நாம் அநுபவிக்கும்படி நேர்ந்தது. பிரெஞ் சுக்காரர்கள் நம் நாடாகிய இந்தியாவின் சிறு பகுதி யான புதுவையைக் கைப்பற்றினார்கள். ஆனால் அங்கு அமைதி நிலவவில்லை. அமைதியை நிலை நாட்டுவதற்காக டியூப்ளே என்பவர் பிரெஞ்சுக் கவர்னராக நியமிக்கப்பட்டார். இவரிடம் தான் நம் ஆனந்தரங்கப் பிள்ளையவர்கள் திவானாக அமர்ந்தார்.

அவர் சென்னையை யடுத்த பிரம்பூரில், திரு வேங்கடம் பிள்ளை என்பவருக்குப் புதல்வராக 1709-ஆம் ஆண்டிற் பிறந்தார். "மகன் தந்தைக் காற்றும் நன்றி, இவன் தந்தை எந்நோற்றான் கொல் என்னும் சொல்," என்னும் தெய்வப் புலவர் திருவள்ளுவர் மொழிக் கிணங்கப் பல கல்விகளையும் கற்றுத் தேர்ச்சி பெற்று, அறிவு படைத்த பல பெரியோர்களின் நன்மதிப்பைப் பெற்றார். இவர் அறிவையும் ஆற்றலையும் கண்ட டியூப்ளே புதுவையில் இவருக்குமுன் திவானாய்ப் பணியாற்றி வந்த இவர் தந்தைக்குப் பிறகு, அப்பதவிக்கு ஏற்றவர், ஆனந்தரங்கப் பிள்ளையே எனக் கருதி இவரைத் திவான் பதவியில் அமர்த்தினார்.

பதவியில் அமர்ந்த ஆனந்தரங்கப்பிள்ளை, ஊதியத்தையே முக்கியமாகக் கருதாமல், அரசியற்றுறையில் ஈடுபட்டுப் பல தொண்டுகள் புரிந்துள்ளார். உள் நாட்டுக் கலகங்களைத் தகர்த்தெறிந்தார். இவர் தொண்டுகளை மெச்சிப் பிரெஞ்சு கவர்னர் இவருக்கு, மன்சுபேதார், வஜாரதராய விஜயர், முதலிய சிறந்த பட்டங்களை வழங்கிப் பல உரிமைகளையும் கொடுத்தார். ஆனந்தரங்கப் பிள்ளையவர்கள், பிரெஞ்சுப் பாதிரிமாரால் இடிக்கப்பட்ட இந்துக் கோயில்களை மறுபடியும் நன்றாகக் கட்டி, இந்துக்களை உற்சாகப் படுத்தி, அரிய மதப்பணி செய்துள்ளார். புதுவையில் வாணிகத் துறையில் இவர் மிகச் சிறந்து விளங்கினார். பாவலர்கள் இவருக்குள்ள தமிழ்ப் பற்றையும், வள்ளன்மையையும் கேள்வியுற்றுப் பல பாக்களைப் பாடி, இவரிடமிருந்து பரிசு பெற்றுச் செல்வார்கள். அத்தகைய புலவர்களுள் சதாசிவ

தேசிகர், மதுர கவிராயர் முதலியவர்கள் மிகச் சிறந்தவர்கள்.

ஒரு சமயம், "ஆனந்தரங்கப் பிள்ளையே, நான் உன்னிடம் வரும்போது, கருடன் இடப்பக்கத்தில் பறக்கப் பார்த்தேன், எழில் நரையானை வலத்தே கண்டேன். மாட மாளிகைகள் சூழ்ந்த புதுவையைக் கண்டேன். புன்னகையுடன் கூடிய உன் முகத்தைப் பார்த்தேன். இனிப் பணத்தைப் பார்த்து விட்டேன்," என்னும் பொருள்பட ஆனந்தரங்கப் பிள்ளையின் வள்ளன்மையைப் பற்றி இராமகவிராயர் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

மதுர கவிராயர் என்னும் செந்தமிழ்ப் புலவர் ஒரு சமயம் வறுமையுற்று, அதைத் தீர்த்துக் கொள்ளப் பிள்ளையின் வீட்டிற்குப் போனுர். அவர் வயற்புறம் சென்றிருப்பதைத் தெரிந்துகொண்டு வயலுக்குச் சென்ருர். மீன்கள் துள்ளிக் குதிக்கும் வாய்க்கால் நீரையும், கதிர்களின் பாரத்தைத் தாங்க முடியாத சாய்ந்த பயிர்களையும், அறுவடை செய்த நிலத்தில் வீழ்ந்துள்ள நென்மணிகளையும், வீழ்ந்தவற்றை ஒவ்வொன்ருகப் பொறுக்கிக் கொண்டிருக்கும் ஆனந்தரங்கப் பிள்ளையவர்களையும் மதுர கவிராயர் கண்டார். தற்செயலாய்த் தலை நிமிர்ந்த பிள்ளையவர்கள் கவிராயரைப் பார்த்து வணக்கம் செலுத்திவிட்டு, "வரப்பின் மேல் உட்காருங்கள், வெகு சீக்கிரத்தில் வருகிறேன்" என்று கூறினுர்.

அவரும் உட்கார்ந்தார். ஆனல் பிள்ளையவர்கள் தன் வேலையை நிறுத்துவதாகக் கவிராயருக்குத் தோன்றவில்லை. ஆகவேகவிராயர், தன் அவசரத்தை

எழுந்திருத்தல் உட்காருதல் முதலிய அறிகுறிகளால் தெரியப்படுத்தினர். இதைக் கண்ட பிள்ளையவர்கள், "ஏனையா பறக்கிறீர்," எனச் சொல்லிக் கடுமை தோன்றக் கூறினர். உடனே கவிராயர், "கொக்கு, குருவி, புரு முதலியவை பறக்கும். மற்றும் சிலர் பறப்பர். செங்கோல் புரியும் உன்னை யண்டிய நான் ஒருகாலும் பறக்க மாட்டேன்," என்ற பொருள் படப் பிள்ளையவர்களைப் பார்த்துக் கூறினர்.

இதைக் கேட்ட பிள்ளையவர்கள், சிந்தனைக் கடலில் மூழ்கினர். பிறகு புலவர் முன் செல்லப் பிள்ளையவர்கள் பின்னே செல்ல, இருவரும் வழியைக் கடந்தார்கள். பிள்ளையவர்கள் தன் மாளிகைக்குக் கவிராயரை அழைத்துச் சென்றார். உள்ளே கவிராயருக்கு உணவளிப்பதற்காகத் தலை வாழையிலை போடப்பட்டது. புலவரும் அமர்ந்தார். இலை நிறையப் பொற் காசுகள் இடப்பட்டன. பிள்ளையவர்கள் புலவரைப் பார்த்து, "உண்ணுங்கள்," என்றார். புலவர் திகைப்புற்றார். "மதுர கவிராயரே! விழிப்பு எதற்கு? நான் பொறுக்கிய நென்மணி பசியைப் போக்குமா? பொற்காசு போக்குமா?" என்று பிள்ளையவர்கள் கவிராயரைக் கேட்டார். அவர் வெட்கமுற்றுத் தன் பிழையை உணர்ந்தார். பிறகு வேறு இலையில் அன்னம் பரிமாறப்பட்டது. பிள்ளையவர்கள் உடன் உட்கார்ந்து உண்டார். பின்னர்ப் பொற்காசுகளை ஏராளமாகக் கொடுத்துப் புலவரைப் பிள்ளையவர்கள் வழியனுப்பினர். புலவரும் முகமலர்ச்சியுடன் சென்றார்.

பிள்ளையவர்கள் குறிப்பு எழுதுவதில் மிகவும் சாமர்த்தியசாலி. தினந்தோறும் தான் கண்ட

காட்சிகளைக் குறிப்புப் புத்தகத்தில் எழுதி வைத்திருந்தார். அக் குறிப்புக்கள் இன்று ஏழு பெரிய நூல்களாக வெளி வந்து பார்ப்பவர் மனத்தை ஆனந்தத்திற் குள்ளாக்குகின்றன. அவற்றை வரலாற்று நீதி என்றுகூடச் சொல்லலாம். ஆகவே இப்பேர்ப்பட்ட அரும் பெருங் குணம் வாய்ந்த பிள்ளையவர்கள் போன்ற சிறந்த வள்ளல்களை ஈன்ற நம் பாரதவன்னையை நாம் என்றும் போற்றக் கடமைப் பட்டிருக்கிறோம். வாழ்க வள்ளல்கள்!

அரும்பதவுரை

நல்லிசை-நல்ல புகழ், நனி சிறந்தவர்-மிகவும் சிறந்தவர், ஆற்றும்-செய்யும், நன்றி-உதவி, என் நோற்றான்-என்ன தவம் செய்தான், பணியாற்றுதல்-வேலை செய்தல், மெச்சி-பாராட்டி, பாவலர்கள்-புலவர்கள், அன்னம்-சோறு, அன்னை-தாய், ஈன்ற-பெற்ற.

பயிற்சி

I கேள்விகள்

1. ஆனந்தரங்கப் பிள்ளையவர்கள் எந்தச் சான்றோர் மொழிக்கு இலக்கானார்?

2. டியூப்ளே புதுவையில் கவர்னராக வரக் காரணம் யாது?

3. ஆனந்தரங்கப் பிள்ளையின் இளமையும் கல்வியும் பற்றித் தெரிவிக்க.

4. பிள்ளையவர்கள் பெற்ற பட்டங்கள் யாவை?

5. இராம கவிராயர் பிள்ளையவர்களைப்பற்றி யாது கூறியுள்ளார்?

6. மதுர கவிராயர் வயற்புறத்தில் கண்ட காட்சிகள் யாவை?

7. மதுரகவிராயருக்கும் பிள்ளையவர்களுக்கும் நடந்த உரையாடல்கள் யாவை?

8. "பிள்ளையவர்கள் குறிப்பு எழுதுவதில் சிறந்தவர்" —விவரிக்க.

II. கீழ்வரும் சொற்களை உன் சொந்த வாக்கியத்தில் பொருத்துக;—

வளம் பொருந்திய, வாய்த்தது, தேர்ச்சிபெற்று, பணியாற்றி, ஈடுபட்டு, தாங்கமுடியாத, ஒவ்வொன்ருக, சிந்தனை, ஏராளமாக.

III கீழ்க்காணும் சொற்களைப் பிரித்தெழுதுக:—

தோன்றிற்புகழ், செந்தமிழ், நல்லிசை, நாட்டரசு, தெய்வப் புலவர், மதப்பணி, இடப்பக்கம், செங்கோல், பொற்காசு, பாரதவன்னை.

IV கீழ்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக :—

தோன்றலின் + தோன்ருமை, தந்தைக்கு + ஆற்றும், தன்மை + மதிப்பு, அரசியல் + துறை, நாடு + கலகம், மாடம் + மாளிகை, நெல் + மணி, வழி + அனுப்பினர், பெருமை + குணம்.

இலக்கணம்

வினைச்சொல்லில் ஒன்ருகிய பெயரெச்சமும் காலத்தைக் காட்டும். இதன் விகுதி 'அ' 'உம்' என்பன.

(உ-ம்) பேசிய பையன்-இதில் அ விகுதி இறந்த காலத்தைக் காட்டியது.

(உ-ம்) பேசுகிற பையன் என்பதிலும் 'அ' நிகழ் காலம் காட்டுகின்றது.

(உ-ம்) உண்ணும் குதிரை, ஆடும் பெண் என்பன. இதில் 'உம்' என்பது எதிர்காலம் காட்டி நின்றது.

இதனுல் 'அ' விகுதி இறந்தகாலம் நிகழ்காலம் ஆகிய இரு காலங்களையும் காட்டி நிற்கும். உம் விகுதி எதிர்காலத்தை மாத்திரம் காட்டி நிற்கும்.

6. பெரியோர் பொன் மொழிகள்

1. செவிக்கும் மனத்திற்கும் இனிமை அளிக்கும் இனிய சொற்கள் இருக்க, கொடிய தீய சொற்களை வழங்குவது இனிய கனிகள் இருக்க இன்னாத காய்களைப் பறித்து உண்பதைப் போலாகும்.

2. கல்வி கேள்வி ஒழுக்கங்களிலே சிறந்த பெரியோர்கள் நடக்கும் வழியில் செல்லாதவன் பல நூல்களைக் கற்றிருந்தாலும் 'கல்லாதவன்' என்றே கூறப்படுவான்.

3. ஒருவனை நேரில் கண்டவுடன் நண்பனைப் போல் நடித்து விட்டு, மறைவில் அவனைப்பற்றி இகழ்ந்து பேசி வாழ்வதைவிட இறப்பதே நல்லது.

—திருவள்ளுவர்.

4. கடையானவர் இடையூறு வரும் என்ற பயத்தினால் காரியங்களைத் தொடங்குவதில்லை; இடையானவர் காரியங்களைத் தொடங்கி இடையூறு வந்தால் விட்டு விடுகின்றனர். தலையானவர்கள் ஆயிரம் இடையூறுகள் வந்தாலும் எடுத்த காரியத்தைச் செய்து முடிப்பார்கள்.

5. எப்போது அக்கினிக்குப் புல், சருகு முதலியவற்றின் சேர்க்கையால் காட்டைக் கொளுத்த வலிமை யுண்டாகிறதோ, அப்போது வாயு நண்பனாய் உதவி பண்ணுகிறது; அந்த நெருப்பே விளக்கு வடிவாய், அந்தரமாய் நிற்கும்

போது காற்றே அதை அவிக்கிறது; ஆதலால் ஒன்றன் சார்பைப் பெற்றவர்கள் பராக்கிரமத்தைப் பெறுகிருர்கள். சார்பற்றவர்கள் சமர்த்தராளுலும் பராக்கிரமக் குறைவடைகிருர்கள்.

—பஞ்ச தந்திரம். தாண்டவராய முதலியார்.

6. கல்வி ஒன்றே உலகில் அழியாப் பெருமையைத் தருவது; செல்வம் நிலேயில்லாதது; இச் செல்வம் கள்வரால் கொண்டு செல்லப் படுவது; வெள்ளத்தால் அழிந்து விடுவது; வேந்தன் சீறின் கவர்ந்து கொள்வான்; எடுக்க எடுக்கக் குறைந்து விடுவது ;பிறருக்குக் கொடுக்கக் கொடுக்கக் குறைவது ; இத்தன்மை யனைத்தும் கல்விக்கு இல்லே ; ஆகவே கல்வி யழியாதது ; செல்வம் நிலேயில்லாதது.

—(நாலடியார்) சமண முனிவர்.

7. மைந்தனேப் பெற்று வளர்த்தல் தாயினது கடமை; கல்வி, கேள்வி, ஒழுக்கங்களிலே சிறந்தவனுக்குவது தந்தையின் கடமை; போர்க் கருவிகளாகிய வேல், வாள் முதலிய ஆயுதங்களேத் திருத்தமாகச் செய்து கொடுத்தல் கொல்லனது கடமை; நல்ல குடிமகனுய்த் திகழச் செய்வது அரசனது கடமை; போர்க்களத்தில் சென்று களிறுகளேக் கொன்று வெற்றி பெறுதல் மைந்தனது கடமை.

—பொன்முடியார் (புறநானூறு).

8. நல்ல காரியத்தைச் செய்யுங்கள்; இது இயலாதாயின் தீய காரியத்தைச் செய்யாமலிருங்

கள். இது எல்லோராலும் புகழக் கூடியது; மகிழ்ச்சியையும் உண்டாக்க வல்லது; மேலும் நல்ல வழியிலே செலுத்தக் கூடியது மாகும்.

—(புறநானூறு) நரிவெரூஉத்தலையார்.

9. தன்னாலும், தன் பரிசனத்தாலும், பகைவராலும், கள்வராலும், கொடிய விலங்குகளாலும் தன் நாட்டிற்குக் கெடுதி வராமல் பாதுகாப்பவனே நாட்டிற்குச் சேவகன் ஆவான்.

—சேக்கிழார்.

10. கடவுளைத் தவம் செய்து உணரவிரும்புகின்றவர்கள் விருப்பு, வெறுப்பு, பொறாமை, ஆசை, சோம்பல், பயம், ஐயப்பாடு, விரோதம் ஆகியவைகளை விட்டுவிட வேண்டும்.

— அரவிந்தர்.

11. பாஞ்ச சன்னியம் என்னும் வலம்புரிச் சங்கை இடத்திலே கொண்ட கொண்டல் வண்ணனின் நாமங்களை ஓதினால் புகழும், திண்மையும், செல்வமும், நோயற்ற உடலும், குற்றமற்ற உயர் குடிப்பிறப்பும் இன்னும் வேண்டுவனவும் நம்மிடம் தானாகவே வந்து சேரும்.

—பேயாழ்வார்.

அரும்பதவுரை

இடையூறு–துன்பம், வாயு-காற்று, சார்பு-பற்று, அந்தரம்-நடு, (தனியாக), பராக்கிரமம்-வலிமை, சமர்த்தன்-நுண்ணறிவுடையவன், களிறு-ஆண்யானை, பரிசனம்-தன்னைச் சேர்ந்தவர்கள், விரோதம்-பகை, நாமம்-பெயர்.

பயிற்சி

I கேள்விகள்

1. 'கனியிருப்பக் காயை உண்பது போலாகும்'— எது ?

2. கல்லாதவன் என்றே கூறுப்படுவான் யார் ?

3. எவ்வாறு வாழ்தலைவிட இறத்தல் நல்லது ?

4. தலையானவர் இடையானவர் கடையானவர் என்பவர்கள் எத்தன்மை யுடையவர்கள் ?

5. சார்புடையவர்கள் வலிமையையும் இல்லாதவர்கள் வலிமைக் குறைவையும் பெறுகிறுர்கள் என்பதை எப்படி'யறியலாம் ?

6. கல்வி நிலையுள்ளது என்பதற்குக் .காட்டப்படும் காரணங்கள் யாவை ?

7. பொன்முடியார் கூறும் கடமைகள் யாவை ?

8. நரிவெரூஉத்தலையார் எக்காரியத்தைச் செய்ய வேண்டும் என்கிறுர் ?

9. நாட்டிற்குச் சிறந்த சேவகன் யார் ?

10. கடவுளைத் தவத்தின் மூலம் உணர விரும்புகின்றவன் என்ன செய்யவேண்டும் ?

11. கொண்டல் வண்ணனின் நாமத்தை யோதினுல் கிடைக்கக்கூடியன யாவை ?

II கீழ்வரும் பதங்களை உங்கள் சொந்த வாக்கியத்தில் வைத்தெழுதுக :

இனிய சொற்கள், தீய சொற்கள், பல நூல்களைக் கற்று, இகழ்ந்து பேசி, இடையூறு வரும், எடுத்த காரியம், திகழச் செய்வது, கொண்டல் வண்ணன்.

III கீழுள்ளவற்றைப் பிரித்தெழுதுக :

பல நூல்கள், நடித்து விட்டு, திகழச் செய்வது, குற்ற மற்ற, நம்மிடம், உண்டாக்க வல்லது, சிறந்தவனுக்குவது, வெற்றி பெறுதல்.

IV கீழுள்ளவற்றைச் சேர்த்தெழுதுக :

இனிமை + சொல், குறைவு + அடைகிறுர்கள், உணர + விரும்பி, செலுத்த + கூடியது, உயர்வு + குடி, தான் + ஆக, வந்து + சேரும், வலம்புரி + சங்கம்.

இலக்கணம்

வினையெச்சம் என்பதும் வினைச் சொல்லின் ஒரு பிரிவு ஆகும். இதிலும் இறந்தகால வினை யெச்சம், நிகழ்கால வினையெச்சம், எதிர்கால வினையெச்சம் என்று மூவகை யுள்ளது.

(உ-ம்) இறந்தகாலம்

படித்து வந்தான்

ஆடி வந்தான் என்பன.

(உ - ம்) நிகழ்காலம்

செய நின்றுன்

வர இருந்தான் என்பன,

(உ - ம்) எதிர்காலம்

பார்க்கின் முடியும்

நேர்ந்தால் அடையலாம்

பார்த்தக் கால் அறிவி என்பன.


7. ஆகாய விமானம்

நம் உலகத்தில் விஞ்ஞானம் முன்னேறிக் கொண்டே வருகின்றது. முதன்முதல் மக்கள் கால் நடையாகவே ஓர் ஊரிலிருந்து மற்ருேர் ஊருக்குச் சென்றனர். காலம் செல்லச் செல்ல வண்டிகளில், மாடுகளைப் பூட்டி அவற்றின் மீது ஏகினர். போரில் தங்கள் கைகளையே ஆயுதங் களாக உபயோகித்தனர். சின்ஞட்களுக்குப் பிறகு, உலோகங்களால் ஈட்டி, கத்தி போன்ற கருவிகளைச் செய்துகொண்டு போர் புரிந்தார்கள். பஞ்சால் நூல் நூற்றுத் தறியிலிட்டுத் தங்களுக்கு இன்றி யமையாத ஆடை முதலியவற்றை நெய்து உடுத்திக் கொண்டார்கள். ஆனல் இக்காலத்தில் விஞ்ஞானத்தின் மகிமையால், எங்குப் பார்த்தா லும் பஸ், புகை வண்டி, ஹைட்ரஜன் குண்டுகள், பஞ்சாலைகள் முதலியவை ஏற்பட்டு மக்களின் கண்ணைக் கவர்ந்து, திகைப்புறும்படி செய்து விடுகின்றன. இவைகள் எல்லாவற்றையும் விட அந்தரத்தில், ஆதாரமின்றிப் பறக்கும் ஆகாய விமானம் விஞ்ஞானத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.


பண்டைக்காலத்திய நூலான சீவகசிந்தாமணி யில், சீவகன் தன் மனைவியை மயில் வாக னத்தில் ஏற்றிக்கொண்டு ஆகாய மார்க்கமாகச் சென்ருன் என்று கூறப்பட்டுள்ளது. இராவண னைக் கொன்று இலங்கையிலிருந்து சீதையைப் புஷ்பக விமானத்தில் ஏற்றிக் கொண்டு இராமன்

அயோத்திக்கு வந்து சேர்ந்தான் என இராமாயண நூலில் கூறப்பட்டுள்ளது. இவ்விரு பண்டைய கதைகளைப் படித்த மனிதனுக்கு என்றுமிராத ஒரு புத்துணர்ச்சி உண்டாயிற்று. நாம் ஏன் பறக்கக் கூடாது ? என்று கருதினன். ஆனல் பறவைகளைப்போல் இறக்கைகள் இல்லாததால் அவ்வெண்ணம் நிறைவேறவில்லை. ஆனல் கனவில் பறந்து கொண்டே இருந்தான். உறங்கி இருந்த மனிதனை விஞ்ஞானம் எழுப்பியது.

இந்நிலையில் மனிதர்களில் பலர் விமானத்தைக் கண்டுபிடிக்க முயன்றனர். முதன் முதலில் உஷ்ணப்படுத்திய காற்றைப் பலூன்களில் அடைத்துப் பறக்க விட்டனர். அது உயரத்தில் பறந்தது. ஆனல், வெப்பம் குறையக் குறையக் கீழே இறங்கத் தொடங்கியது. பிறகு ஜெப்பளின் என்னும் பேருருவுடைய ஆகாயக் கப்பல்கள் தயாரிக்கப்பட்டன. இவற்றில் ஹைட்ரஜன் வாயு நிரப்பப்பட்டது. இதில் பிரயாணிகள் ஏறலாம். ஆனல் இது ஆகாய விமான வேகத்தைவிட மிகக் குறைந்த வேகமுடையது. தீப்பற்றி எரியும் குணமுடையது ஹைட்ரஜன்; ஆதலால் இதற்குத் தீவிபத்து ஏற்படும். பிறகு ஹீலியம் என்னும் வாயு உபயோகிக்கப்பட்டது. இது ஹைட்ரஜனை விடப் பளுவாய் இருந்த போதிலும், தீப்பற்றி எரியாது. தற்காலம் இதுதான் வானவூர்திகளுக்கு உபயோகப்படுகிறது. இவ்வாயுவை அடைத்து விடப்பட்ட விமானங்களே, இப்பொழுது வெகு தூரம் பறந்து செல்கின்றன.



ரைட் சகோதரர்கள் கண்டுபிடித்த முதல் விமானம்



ஜெப்பளின்



லாங்லி என்னும் அமெரிக்க விமானியொருவர் 1866-ஆம் ஆண்டில் காற்றில் பறக்கும் ஓர் ஊர்தியைச் செய்தார். அது சிறிது தூரம் பறந்தது. பிறகு பெரிய இறக்கைகளையுடைய கிளைடர் என்ற விமானத்தை ஜெர்மன் எஞ்சினீயர் ஒருவர் அமைத்தார். பலமுறை அவர் அதன்மீது ஆகாயத்தில் பறந்து இறுதியில் உயிரிழந்தார்.

கடைசியாக 1903-ம் ஆண்டில் இன்று ஆகாயத்தில் பறக்கும் விமானம் போன்ற ஊர்தியை ரைட் சகோதரர்கள் தோற்றுவித்தார்கள். இவர்கள் அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவர்கள். சகோதரரின் பெயர்கள் ஆர்வில் ரயிட், வில்பர் ரயிட் என்பனவாம். ஆகாயவிமானம் முன்புறம் பருத்து நீண்ட வடிவுடையது. முன்புறம் பின்புறம் இறண்டு இறக்கைகள் உண்டு. முன்பக்கத்தில் செலுத்துவதற்குரிய ஓர் எஞ்சின் இருக்கும். பெட்ரோல் என்னும் எண்ணெயின் உதவியால் இது இயக்கப்படுகிறது. விமான உதவியால் கடல்கடந்த நாடுகளையும், ஏறமுடியாத மலையுச்சிகளையும் காணலாம். பன்னாட்களில் செல்லக்கூடிய தொலைவிலுள்ள நாடுகளைச் சில மணி நேரத்தில் அடைந்து விடலாம். விமானத்தில் செல்லுவதால் அயல் நாடுகள் அண்மை வீடுகள் போல் காட்சியளிக்கின்றன. பல அயல் நாட்டுச் சரக்குகளை ஏற்றுமதி, இறக்குமதி செய்யவும் ஊர்திகள் பயன்படுகின்றன. இவ்வூர்திகளால் தூரமும் நேரமும் பிரயாணத்தில் குறுகின. விமானங்கள் ஆக்க முறையில் எவ்வளவு பயனளிக்கின்றனவோ, அதைவிடப் பன்மடங்கு அழித்தற்றுறையிலும் பயன்படுகின்றன. இக்காலத்தில் வீரர்கள் உலகத்

தையே சிதைக்கும் ஹைட்ரஜன் முதலிய மிகப் பெரிய பயங்கரமான குண்டுகளை விமானங்களில் ஏற்றிக்கொண்டு, வெகுதூரம் சென்று வீசுகின்றனர். இவற்றால், பெரிய பெரிய கட்டிடங்களேயன்றி நகரங்களும் அழிகின்றன. பல மக்கள் இறந்து படுகின்றனர். பயிர், மரம், செடி, கொடி முதலிய பொருள்கள் பொலிவழிந்து விடுகின்றன. இயற்கையன்னையே மறைந்து விடுகிறாள்.

பஸ்மாசுரன் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்தான். சிவபெருமான் ஈன்ற வரத்தை அவரிடமே பரீட்சித்தான். தானே இறந்தான். விபீடணன் தவத்தால் இறைவனையடைந்தான். ஆகவே இவர்கள் செய்த தவத்தில் தவறொன்றும் இல்லை. அத்தகைய தவத்தைப் போன்றதே விஞ்ஞானம். அதனால் ஏற்பட்ட விமானம் முதலியவற்றை ஆக்க வழியிலேயே மனிதர்கள் பயன்படுத்தினால் மிகுந்த பயன் அடையலாம். பிள்ளைகளே! நாமும் விஞ்ஞானத்தை மேன்மேலும் வளர்ப்போமாக—மக்களுக்கு அதன் பயனை நல்ல வழியில் செலுத்துவோமாக.

அரும்பதவுரை

ஏகினர் - சென்றார்கள், ஆயுதம் - கருவி, இன்றியமையாத - அவசியமான, வாகனம் - பொறி, உஷ்ணம் - வெப்பம், வாயு - காற்று, விபத்து - ஆபத்து, வானவூர்தி - ஆகாயவிமானம், இறுதி - கடைசி, தோற்றுவித்தல் - உண்டாக்குதல், அண்மை - சமீபம், சிதைத்தல் - அழித்தல், எடுத்துக்காட்டு - உதாரணம்.

பயிற்சி

I கேள்விகள் :

(1) பண்டைக்கால மக்களின் பிரயாணம், போர் இவற்றைப் பற்றிக் கூறுக.

(2) சீவக சிந்தாமணியில் விமானத்தைப் பற்றி யாது கூறப்பட்டுள்ளது ?

(3) இராமாயணத்திலுள்ள விமான வரலாறு யாது ?

(4) ஜெப்பளின் விமானம் எத்தகையது ?

(5) கிளைடர் விமானத்தைப் பற்றி நீ அறிந்தவை யாவை ?

(6) ரைட் சகோதரர்களின் வரலாற்றை எழுது.

(7) விமானத்தின் அமைப்பைக் கூறுக.

(8) ஆகாய விமானத்தால் ஏற்படும் நன்மை தீமைகள் யாவை ?

(9) விஞ்ஞானம் தவத்தைப் போன்றது—எப்படி ?

II கீழ்க்கண்ட சொற்களை உன் சொந்த வாக்கியத்தில் அமைக்க :

செல்லச் செல்ல, ஆயுதங்களாக, திகைப்புறும்படி, பண்டைக் காலத்திய, நிறைவேறவில்லை, வெகுதூரம், இறுதியில், உதவியால், ஏற்றுமதி, ஆக்கமுறை, எடுத்துக் காட்டாக.

III கீழ்க்கண்ட சொற்களைப் பிரித்து எழுது:

பஞ்சாலை, புத்துணர்ச்சி, அவ்வெண்ணம், பேருருவம், வானவூர்தி, திகைப்புறுதல்.

IV கீழ்க்கண்ட சொற்களைச் சேர்த்து எழுதுக:

ஆக்கம் + முறை, அழித்தல் + துறை, பல + மடங்கு, பல + நாள், ஆகாயம் + கப்பல், எங்கு + பார்த்தாலும்.

V முதல் மூன்று பாராவில் அமைந்துள்ள வினையெச்ச வினை முற்றுக்களை எடுத்தெழுதுக:

VI கீழுள்ள வினைமுற்றுக்கள் எந்தக் காலத்தைக் காட்டுகின்றன என்பதை எழுதுக:

(1) நான் படித்தேன்

(2) அவன் உறங்குவான்

(3) நீ வெற்றி பெறுவாய்

(4) அவன் வந்தான்

(5) நாங்கள் பாடினோம்

இலக்கணம்

திணைபற்றி வரும் பெயர்கள்

திணையாவது யாது என்பதை முதற் பிரிவில் படித்தீர்கள். அத்திணை இரண்டும் பற்றிவரும் பெயர்கள் முறையே உயர்திணைப் பெயர் அஃறிணைப் பெயர் என்றிருவகைப்படும்.

(உ-ம்) முருகன், தேவன், நாகர், என்பன உயர்திணைப் பெயர்கள். நாய், பன்றி, காக்கை, கல்—முதலியன அஃறிணைப் பெயர்கள்.

ஆண் பால், பெண் பால், பலர் பால், ஒன்றன் பால், பலவின் பால், என்ற பால்களைப்பற்றி வரும் பெயர்களும் உண்டு.

1. கந்தன், இராமன்—ஆண்பாற் பெயர்கள்.

2. இலக்குமி, பார்வதி, வள்ளி—பெண் பாற் பெயர்கள்.

3. வேளாளர், தொழிலாளர்—பலர் பாற் பெயர்கள்.

4. எருமை, ஆடு, நாய் என்பன ஒன்றன் பாற் பெயர்கள்.

5. எருமைகள், ஆடுகள், நாய்கள் என்பன பலவின் பாற் பெயர்கள்.

I வாழ்த்து

கடவுள் வாழ்த்து

சிவபெருமான்

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனதென்றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

—மாணிக்கவாசகர்

திருமால்

மனத்திலோர் தூய்மை இல்லை
வாயிலோர் இன்சொல் இல்லை
சினத்தினால் செற்றம் நோக்கித்
தீவிளி விளிவன் வாளா
புனத்துழாய் மாலை யானே
பொன்னி சூழ் திருஅரங்கா
எனக்கினிக் கதியென் சொல்லாய்
என்னை ஆளுடைய கோவே.

—தொண்டரடிப்பொடி யாழ்வார்

கலைமகள்

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தி னுள்ளே
யிருப்பளிங்கு வாரா திடர்.

—கம்பர்

குறிப்புரை

1. வான் - ஆகாயம், மண் - பூமி, வளி - காற்று, ஒளி - நெருப்பு, ஊன் - உடல், உண்மை - உள்ள பொருள், இன்மை - இல்லாத பொருள், கோன் - தலைவன், (அரசன்) கூத்தாட்டுவான் - கூத்தாடச் செய்பவன், நின்றனை - நின்ற உன்னை.

2. தூய்மை - பரிசுத்தம், செற்றம் -பகைமை, தீவிளி- கடுஞ்சொற்கள், விளிவன் - சொல்லுவேன், வாளா-வீணாக, புனத்துழாய் - முல்லை நிலத்தில் விளையும் துளசி, பொன்னி - காவிரி, கதி-வழி, கோவே - தலைவனே.

3. ஆய - தோன்றியுள்ள, ஏய - பொருந்த; தக்கபடி, உணர்விக்கும் - அறிவிக்கும், தூய - சுத்தமான, உரு - வடிவம், பளிங்கு - கண்ணாடி, இடர் - துன்பம், வாராது-வராது.

வினாக்கள்

1. இறைவனின் வடிவங்களாக மாணிக்கவாசகர் எவ்வெவற்றைக் குறிப்பிடுகிறார் ?

2. தொண்டரடிப்பொடி யாழ்வார் திருமாலிடம் கூறுவது என்ன ?

3. கம்பர் கலைமகளை எவ்வாறு துதிக்கிறார் ?

II அறவுரை

1. திரிகடுகம்

தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்—
வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்
கோளாளன் என்பான் மறவாதான் இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது. 1

உண்பொழுது நீராடி யுண்டலும் என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும்—தோல்வற்றிச்
சாயினுஞ் சான்றாண்மை குன்றாமை யிம்மூன்றும்
தூஉயம் என்பார் தொழில். 2

தன்னை வியந்து தருக்கலும் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்—முன்னிய
பல்பொருள் வெஃகும் சிறுமையும் இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை. 3

வைததனை இன்சொல்லாக் கொள்வானும் நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும்—ஊறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானும் இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டு வாழ்வார். 4

கற்றாரைக் கைவிட்டு வாழ்தலும் காமுற்ற
பெட்டாங்கு செய்தொழுகும் பேதையும்—முட்டின்றி
அல்லவை செய்யும் அலவலையும் இம்மூவர்
நல்லுலகஞ் சேரா தவர். 5

—நல்லாதனார்

குறிப்புரை

திரிகடுகம் :—சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மூன்றும் மக்களின் உடல் நோயைத் தீர்க்கும் மருந்துப் பொருள்

களாம். அதுபோல மும்மூன்று செய்திகளைக் கூறும் பாட்டுக்களாகிய இந்நூல் மக்களின் அறியாமையைப் போக்குவதால் திரிகடுகம் என்று பெயர் பெற்றது. இந்நூல் 100 செய்யுட்களைக் கொண்டது.

1, தாள் ஆளன் - முயற்சியுடையவன், வேளாளன் - உபகாரம் செய்பவன், கேளாளன் - நூல் பொருளைக் கொள்ளும் மாணுக்கன், கேளாக - நண்பர்களாகயிருக்க.

2. உண்பொழுது - உணவு கொள்ளுவதற்கு முன்னே. பால் பற்றி - ஒரு தலையாக, (நட்பு அல்லது உறவு பற்றி) தோல் வற்றி - உடல் இளைத்து, சாயினும் - அழிவதாயிருந்தாலும், சான்ருண்மை - நற்குண நற்செயலைக் கையாளும் தன்மை, தூஉயம் - பரிசுத்தமானவர்.

3. தருக்கல் - கர்வப்படுதல், தாழ்வு - (வணக்கம்) பணிவு, கொன்னே - வீணுக, வெஃகும் - விரும்புகின்ற, உடைக்கும் - அழிக்கும்.

4. வைததனை - நிந்தை மொழியை (திட்டியதை), கைப்பதனை - கசப்பான பொருளை, கட்டி - வெல்லம், மெய்ப்பொருள் - உண்மைப் பொருளாகிய இறைவன்.

5. கைவிட்டு - நீங்கி, காமுற்ற - விரும்பியவற்றை, பெட்டாங்கு - விரும்பியதுபோல, பேதையும் - அறிவிலியும், முட்டு இன்றி - தடையில்லாமல், அலவலையும் - பேச்சுக்காரனையும், நல்லுலகம் - மோட்சம் (தேவருலகமுமாம்.)

வினுக்கள்

1. தாளாளன், வேளாளன், கோளாளன் என்போர் யார்?

2. எம்மூவர் நட்பினராயிருத்தல் இனிது?

3. தூய்மையுடையவரின் தொழில்கள் எவை?

4. செல்வத்தை அழிக்கும் படை எவை?

5. எம்மூவர் மெய்ப்பொருள் கண்டு வாழ்வார்?

6. நல்லுலகஞ் சேராதவர் எவர்?

2. இனிது நாற்பது

மானம் அழிந்தபின் வாழாமை முன்இனிதே;
தானம் அழியாமைத் தானடங்கி வாழ்வினிதே;
ஊனமொன் றின்றி உயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லாம் இனிது. 1

வருவாய் அறிந்து வழங்கல் இனிது;
ஒருவர்பங் காகாத ஊக்கம் இனிதே;
பெருவகைத் தாயினும் பெட்டவை செய்யார்
திரிபின்றி வாழ்தல் இனிது. 2

வெல்வது வேண்டி வெகுளாதான் நோன்பினிதே;
ஒல்லுந் துணையுமொன்றுய்ப்பான் பொறையினிதே;
இல்லது காமுற்று இரங்கி இடர்ப்படார்
செய்வது செய்தல் இனிது. 3

—பூதஞ்சேந்தனார்

குறிப்புரை

இனிது நாற்பது :—இனிமையான செய்திகளைத் தெரிவிக்கும் நாற்பது வெண்பாக்களால் ஆகிய நூல். இது பதினெண் கீழ்க் கணக்கைச் சேர்ந்தது.

1. அழிந்த பின் - கெட்ட பிறகு, தானம் - நிலை, ஊனம் - குறை, மானிடவர் - மனிதர்.

2. வழங்கல் - செலவு செய்தல், ஒருவர் பங்காகாத - ஒருவர் பக்கம் சேராத, பெருவகைத்து - மிகுந்த பயனைத் தருவது; பெட்டவை-விரும்பிய காரியங்களை, திரிபு-மயக்கம்.

3. வெகுளாதான் - கோபிக்காதவன், நோன்பு - (விரதம்) பொறுமை, ஒல்லுந்துணையும் - முடிந்த வரையிலும், உய்ப்பான் - நடத்துகிறவனுடைய, காமுற்று-ஆசைப்பட்டு, இடர் - துன்பம், பொறை - பொறுமை.

வினாக்கள்

1. மானிடவர்க்கெல்லாம் இனிது எது ?

2. வழங்கலும், ஊக்கமும், வாழ்தலும் இனிதாவது எங்ஙனம் ?

3. யாருடைய நோன்பு இனிது ? எவருடைய பொறை இனிது ? எவ்வாறு செய்வது செய்தல் நல்லது ?

3. சதகங்கள்

1. திருவேங்கட சதகம்

கல்விப்பயன்

தெள்ளமுதம் அனையகல் விப்பொருள் படைத்திடில்
தேசமெல் லாந்துதிக்கும்;
செயத்தம்பம் ஆனபுகழ் நிலைநிற்கும் இவையெலாம்;
செம் பொன்மிகு செல்வ மதுபோல்
வெள்ளமது கொளுமெனும் பயமில்லை; கனவினால்
வெம்பவரு சலனமில்லை;
வேந்தர்கள் பறித்திடக் கூடாது; சோதரர்
விரும்பினும் பங்குறாது;
கள்ளரால் திருடவும் முடியாது; வரவரக்
கனமதால் குறை வுறாது;
கருணைஞானந் தழையும் ஆகையால் உனையிதய
கமலத்தில் வைப்ப தெளிதாம்;
வள்ளலென வருகின்ற மாடபூ சியரதிபன்
மணவாள நாராயணன்
யனதிலுறை அலர்மேல் மங்கைமண வாளனே !
வரதவேங் கடராயனே ! 1

—வெண்மணி நாராயண பாரதியார்

2. குமரேச சதகம்

சொன்ன சொல் தவருதவர்

தந்தைதாய் வாக்யபரி பாலனம் செய்தவன்
தசரத குமார ராமன்;
தமயனருள் வாக்யபரி பாலனம் செய்தோர்கள்
தருமனுக் கிளைய நால்வர்;
சிந்தையி லுணர்ந்துகுரு வாக்யபரி பாலனஞ்
செய்தவன் அரிச் சந்திரன்;
தேகியென் ருேர்க்கிலை யெனுவாக்யபரி பாலனஞ்
செய்தவன் தான கன்னன்;
நிந்தைதவிர் வாக்யபரி பாலனம் செய்தவன்
நீள்பல மிகுந்த அநுமான்;
நிறையுடன் பத்தாவின் வாக்யபரி பாலனம்
நிலத்தினில் நளாயினி செய்தாள்;
மந்தைவழி கோயில்குள முங்குலவு தும்பிமுகன்
மகிழ்தர உகந்த துணைவா!
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே! 2

—குருபாத தாசர்

குறிப்புரை

சதகங்கள்:—நூறு பாடல்கள் கொண்ட நூலுக்குச் சதகம் என்று பெயர். இச்சதகங்கள் பல உதாரணங்களுடன் அரிய நீதிகளை அறிவிக்கின்றன. திருவேங்கடத்தில் எழுந்தருளியுள்ள இறைவனைத் துதிக்கும் பாடல்கள் அடங்கிய நூல் திருவேங்கட சதகமாகும். புல்வயல் என்னும் திருப்பதியில் வீற்றிருக்கும் முருகப் பிரானைக் குறித்துப் பாடிய நூல் குமரேச சதகமாகும்.

வெண்மணி நாராயண பாரதியார்:—இவர் களமூரை அடுத்த வெண்மணி என்னும் ஊரில் தோன்றியவர். வைணவ மதத்தைச் சார்ந்தவர். களமூரில் வள்ளலாக வாழ்ந்து வந்த மணவாள நாராயணன் என்பவரால் ஆதரிக்கப்பட்டவர்.

குருபாத தாசர்:—இவர் புதுக்கோட்டையைச் சார்ந்த புல்வயல் என்ற ஊரில் வாழ்ந்தவர். இவரது இயற்பெயர் முத்து மீனுட்சிக் கவிராயர் என்று கூறுவர். இவரது காலம் இற்றைக்கு இருநூறு ஆண்டுகள் முந்தியது என்று தெரிகிறது.

1. தேசம்-நாட்டு மக்கள், செயத்தம்பம்-வெற்றித் தூண், கனல்-நெருப்பு, வெம்ப-வெந்துவிட, சலனம்-அழிவு, சோதரர்-உடன் பிறந்தவர், பங்குருது-பங்காகப் பொருந்தாது. (பங்கு + உருது—என்று பிரிக்க) கனம்-பெருமை பெறுதல், தழையும்-பெருகும், இதய கமலம்-மனமாகிய தாமரை, மாடபூசியர்-மாடபூசி என்னும் குடியில் பிறந்தவர், அலர்மேல் மங்கை-செந்தாமரையில் வசிக்கும் இலக்குமி, மணவாளன்-கணவன், வரதன்-வரங்களைக் கொடுப்பவன்.

2. வாக்யம்-சொல், பரிபாலனம்-காப்பாற்றுதல், தருமன்-தருமபுத்திரர், இளைய நால்வர் பீமன், அருச்சுனன், நகுலன், சகதேவன் என்பவர்கள், குரு-ஆசிரியர், தேகி-கொடு, கன்னன்-கர்ணன், நிந்தை-பழி, நிறை-கற்பு, பத்தா-கணவன், மந்தைவழி-மாட்டு மந்தைகள் செல்லும் வழி, குலவும்-விளங்குகின்ற, தும்பி-யானை, உகந்த-விருப்பமான, துணைவன்-உடன் பிறந்தவன், புல் வயல்-புதுக்கோட்டையை அடுத்த ஓரூர், நீடு-உயர்ந்த, மேவும்-பொருந்திய.

வினுக்கள்

1. கல்வியால் ஒருவர் பெறத்தக்க பயன்கள் யாவை?

2. செல்வத்திற்கு எவற்ருல் அழிவுண்டாகும்?

3. கல்வி, செல்வத்தைவிட எவ்வகைகளில் சிறந்தவை ?

4. இராமன் பெற்ரேர் சொல்லை எவ்வாறு காப்பாற்றிஞன் ?

5. தருமனுக்கு இளையவர் யார் ? அவர்கள் தமையன் சொல்லைக் கேட்டுச் செய்தது யாது ?

6. அரிச்சந்திரன், கர்ணன் ஆகியவர்கள் எங்ஙனம் புகழ் பெற்றனர் ?

7. அனுமானுக்குச் சுக்கிரீவனுல் தரப்பட்ட பணி யாது ?

8. நளாயினியின் புகழை விளக்கும் நிகழ்ச்சி யாது ?

9. தும்பி முகன் யார் ? இவர் எவ்விடங்களில் விளங்குகிருர் ?

10. இப்பாடலில் தரப்பட்டுள்ள உதாரணங்களிலிருந்து நீங்கள் அறியும் நீதிகள் என்ன ?

III கதைப் பகுதி

1. நளவெண்பா

நளன் தமயந்தியின் சுயம்வரச் செய்தி கேட்டு விதர்ப்ப நாட்டின் தலைநகரை அடைதல்

சடைச் செந்நெல் பொன்விளைக்குந் தன்னாடு பின்னாக்
கடற்றானை முன்னாகக் கண்டான்—அடற்கமைந்த
வில்லியரும் பொற்றாம வீமன் திருமகளாம்
நல்லுயிரும் வாழும் நகர். 1

சுயம்வரம் குறித்து அரசர் பலரும் மண மண்டபத்தில் கூடுதல்

முரைசெறிந்த நாளேழும் முற்றியபின் கொற்ற
வரை செறிந்த தோள்மன்னர் வந்தார்—விரை செறிந்த
மாலை துவள முடிதயங்க வால்வளையுங்
காலை முரசும் கலந்து. 2

தமயந்தி சுயம்வர மண்டபம் புகுதல்

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்னி றத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னஞ் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று. 3

சேடி யொருத்தி அரசர் பலரையும் தமயந்திக்குக் காட்டுதல்

மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென் றியலணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து. 4

நளன் வடிவில் வந்திருந்த இந்திரன் முதலியோரைக் கண்டு தமயந்தி உள்ளங் கலங்குதல்

காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீரிருவர்
தேவர் நளனு ருவாச் சென்றிருந்தார்—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணுநின்று
ஊசலா டுற்ருள் உளம். 5

உண்மை நளனுக்கு மணமாலை சூட்ட அருளுமாறு தமயந்தி தெய்வத்தை வேண்டல்

மின்னுந்தார் வீமன்றன் மெய்ம்மரபிற் செம்மை சேர்
கன்னியா ளுகிற் கடிமாலை—அன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட அருளென்ருள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து. 6

நளன் வடிவில் வந்திருந்த தேவர்களிடமிருந்த உண்மை நளனை வேறு பிரித்தல்

கண்ணிமைத் தலாலடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால்—எண்ணி
நறுந்தா மரைவிரும்பு நன்னுதலே யன்னுள்
அறிந்தாள் நளன்றன்னை ஆங்கு. 7

நளனுக்குத் தமயந்தி மாலை சூட்டுதல்

விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகன் ஞாலங் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினுள் பொன். 8

—புகழேந்திப் புலவர்

குறிப்புரை

1. சடைச்செந்நெல்-சடைச்சம்பா என்னும் செந்நெற் பயிர், தன்நாடு-நிடத தேயம், கடல் தானை-கடல் போன்ற சேனை, அடற்கு அமைந்த-போருக்குப் பொருந்திய, வில்லியர்-வில் ஏந்திய வீரர்கள், தாமம்-மாலை, நகர்-குண்டின புரம்.

2. முரைசு-முரசு, எறிதல்-அடித்தல், முற்காலத்தில் திருமணத்திற்கு ஏழு நாள் முன் தொடங்கி முரசு அறைவது வழக்கம். முற்றிய பின்-முடிந்த பிறகு, வரை-மலை, விரை-வாசனை; மணம், தயங்க-விளங்க, வால் வளை - வெண்மையான சங்கொலி.

3. விழித் தாமரை-கண்களாகிய தாமரை மலர், பொன்னின்-திருமகள்போன்ற, மின்-மின்னல். சிறை-சிறகு, பொய்கைவாய்-குளத்தில்.

4. குலம்-மரபு, பரிசு-தன்மை, இயலணங்கு-நாமகள் (இங்கு ஆகுபெயரால் அவள் போன்ற ஓர் தோழி குறிப்பிடப்பட்டுள்ளாள்), தனிக்கொடி-ஒப்பற்ற பூங்கொடி போல்வாள் (தமயந்தி).

5. காவலர்-அரசர், சேடி-தோழி, தேவர் ஈரிருவர்-நான்கு தேவர்கள், ஈரிருவர்-வருணன், இந்திரன், யமன், அக்கினி ஆகிய நால்வர், பூவரைந்த-பூவைக் கொண்ட, மாசு-குற்றம், உளம்-மனம்.

6. மெய்ம்மரபு-அழிவில்லாத குலம், கடி-மணம், சூழ் விதியின் மன்னவன்-விதிக்குத் தலைவனாகிய கடவுள்.

7. காசினி-பூமி, தோய்தல்-பொருந்துதல், தாமரை விரும்பும் நன்னுதல்-திருமகள் (தாமரை மலரின் மேல் விரும்பி வசிக்கும் நல்ல நெற்றியை யுடைய இலக்குமி).

8. மனம் சுளிக்க - மனம் வருந்த, கண் அகல் - இடம் அகன்ற, களி - மகிழ்ச்சி, வன்மால் - மிகுந்த மயக்கம், வய வேந்தை - வலிய நளனுக்கு, பொன், பொன்மாலை சூட்டினுள் - பொன் போன்றவளான தமயந்தி அழகிய மண மாலையைச் சூட்டினுள்.

கேள்விகள்

1. நளனுடைய நாட்டின் சிறப்பை ஆசிரியர் எவ்வாறு கூறுகின்ருர் ?

2. முற்காலத்தில் சுயம்வரம் எங்ஙனம் நடைபெற்றது ?

3. தமயந்தி சுயம்வரம் மண்டபத்தினுள் புகுந்ததைக் கவி எங்ஙனம் வருணிக்கின்ருர் ?

4. தோழி தமயந்திக்குச் சுயம்வர மண்டபத்தில் கூறியது என்ன ?

5. உளம் ஊசலாடுற்றவள் யார் ? ஏன் ? ஈரிருவர் தேவர் எவ்வெவர் ?

6. தமயந்தி இறைவனிடம் யாது வேண்டினுள் ?

7. தமயந்தி, உண்மை நளனை எவ்வாறு அறிந்தாள் ?

8. தமயந்தி நளனுக்கு மாலையிட்டபோது தேவர்கள், மக்கள் முறையே என்னென்ன நிலையடைந்தனர் ?

9. (சுயம்வர) மண்டபம் = குளம்
____________ = தாமரை
____________ = அன்னம்
} கோடிட்ட இடங்களைப் பூர்த்திசெய்.

10. அன்னம்——நிறத்தையுடையது
ஆனல்——பாதங்களையுடையது
} கோடிட்ட இடங்களைப் பூர்த்திசெய்.

2. பஞ்சதந்திரம்

நண்டு கொக்கைக் கொன்ற கதை

மீனென்றையு மேதி ன்றுடல்
 மிகவே வளர் கொக்கு
தானங்கொரு பால் நண்டு
 தனைக் கண்டிரை கொள்ள
ஞானந் தரு மோனங் கொடு
 நண்ணும் படி கண்டு அப்
பால் நண்டிதை, " நீயிங்குறை
 பண் பேதுரை, " என்ன 1.

" என்னென்றுரை செய்வேன் ? இனி
 யான் எங்ஙனம் உய்வேன் ?
கொன்னுந்திய வலை காரர்கள்
 கூடிக் குளம் ஏரி
மன்னும் தடம் எல்லாம் மிக
 வளைத்தே வலை வீசி
சின்னஞ்சிறு பொடிமீன் முதல்
 சேரப்பிடித் தாரே ! 2.

" இந்தக் குளம் நாளைக்கென
 எண்ணிக் கொடு போனர்
அந்தப்படி வந்தே பிடித்து
 அவர் காவினில் எடுத்தே
சந்தைக் கடை தொறும் மீன்விலை
 தானே என விற்பார்
எந்தப்படி இவர் தப்புவது ?
 என எண்ணி யிருந்தேன். 3.

"அந் தப்பழி காரர் வரு
முனமே யொர் உபாயம்
சித்தித்தனன் ; நான் அப்படிச்
செய்தால் அவை உய்யும்
எந்தப்படி யானும் அழைத்து
இங்கே வரு வாயேல்
இந்தக் குளம் விட்டோர் குளம்
எய்தும்படி செய்வேன்." 4.

என்றே பக ராசன் சொல
இயல் நண் டதை நம்பிச்
சென்றேபல மீனே டுரை
செயவே அவை கூடி
நன்றே யென வர, ஒவ்வொரு
நடைக் கொன்று கொண் டேகிக்
கொன்றே சில, தின்றே சில,
கொடும் பாறையில் உலர்த்தி, 5.

அலவன் தசை தனையுண்டிட
அதையும் கொடு செல ; அந்
நிலமெங்கணும் மீனென்புகள்
நிறை கொண்டது கண்டே,
"நலதிங்கிது பல மீனையும்
நனி தின்றது நமையும்
கொல வந்தது நாமும் இது
கொலுமுன் கொலுவோமே. 6.
"நம்மால் வரு பிழையே யிது
நாமும் அந்த மீன் போல்
சும்மா இருந் தனமேல் கொலும்
அதிலே யொரு சூழ்ச்சி

எம்மால் வகை வரு மாறினிச்
செய்வே'' மென வெண்ணி
அம்மா பகன் கழுத்தைக் கவை
அடியால் நெருக்கியதே. 7.

நெருக் குண்டற வீழ்ந்தே கொக்கு
நீங் கிற்றுயிர் ; அலவன்
இருக்கும் தலம் ஏகித்தனது
இனத்தோ டிருந்ததுவே ;
செருக்கும் பகை பெரிதாகிலும்
சிலதந்திர வகையால்
முருக்கும்படி நினைத்தால் அதின்
முடியாததும் உளதோ ! 8.

—வீரமார்த்தாண்ட தேவர்

குறிப்புரை

1. ஒருபால் - ஒருபக்கம், இரை - உணவு, மோனம்-மௌனம், உறை - தங்கும், உரை - சொல்லுவாயாக.

2. உய்வேன் - பிழைப்பேன், கொன்னுந்திய - கொல்லும் தன்மையுடைய, வலைகாரர் - செம்படவர்கள். தடம் - குளம்.

3. அந்தப்படி - அந்தவிதமே, கா - தோளில் தொங்கும் கூடை, எந்தப்படி - எந்தவிதமாக.

4. உபாயம் - தந்திரம், உய்யும் - தப்பிப் பிழைக்கும், எய்தும்படி - அடையும்படி.

5. பகராசன்-கொக்கு அரசன், உரைசெய- சொல்ல, நன்று - நல்லது, ஏகி - சென்று.

6. அலவன்-நண்டு, என்பு - எலும்பு, கொல வந்தது - கொல்லுவதற்கு வந்துள்ளது.

7. பிழை - தவறு அல்லது குற்றம், சூழ்ச்சி - இரகசியமான யோசனை, பகன் - கொக்கு.

8. தலம் - இடம், தந்திரம் - உபாயம், முருக்கும்படி - கொல்லும்படி.

வினாக்கள்

1. கொக்கு நண்டைக் கொல்ல என்ன உபாயம் செய்தது ?

2. நண்டிடம் கொக்கு சொன்னது என்ன ?

3. நண்டு மீன்களிடம் என்ன கூறிற்று ?

4. கொக்கின் வஞ்சகத்தை நண்டு எவ்வாறு அறிந்தது ?

5. நண்டு கொக்கை எவ்வாறு தண்டித்தது ?

6. இதனால் நீங்கள் அறிந்து கொள்ளும் நீதி யாது ?

IV பல்சுவை

தனிப்பாடல்

சீராடை யற்ற வயிரவன் வாகனம் சேரவந்து
பாராரும்நான்முகன் வாகனந் தன்னைமுன்பற்றிக் கௌவி
நாராயணனுயர் வாகனமாயிற்று ; நம்மை முகம்
பாரான் மைவாகனன் வந்தே வயிற்றினிற் பற்றினனே.

—அந்தகக்கவி வீரராகவமுதலியார்

புறநானூறு

ஈயென இரத்தல் இழிந்தன்று; அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று.

விடுகதை

முன் ஒரு ஊரின் பேராம்
முதலெழுத் தில்லாவிட்டால்
நன்னகர் மன்னன் பேராம்
நடுஎழுத் தில்லாவிட்டால்
கன்னமாமிருகத்தின்பேர்
கடையெழுத்தில்லாவிட்டால்
உன்னிய தேனின் பேராம்
ஊரின்பேர் விளம்புவீரே.

—இராமசாமிக் கவிராயர்

நாட்டுத்தொண்டு

ஊருக்குத் தொண்டு செய்வோம்— நல்ல
உடலுக்குத் தொண்டு செய்வோம்.
பாருக்குத் தொண்டுசெய் பாக்கியமே
பரமானந்தம் ஆனந்தமே.
வீதியைப் பெருக்கிடுவோம்—கெட்ட
வீச்சத்தைப் போக்கிடுவோம்.
சோதி துலங்கிட வீடுகள் யாவையும்
சுத்தமாய் வைத்திடுவோம்.
அழகினைத் தொழுதிடுவோம்—நம்மை
அணிசெயும் கலைவளர்ப்போம்.
பழகிய கல்வியைப் பலருக்கும் பரப்பிடப்
பள்ளிகள் அமைத்திடுவோம்.
நோய்களைத் தவிர்த்திடுவோம்—நாம்
நூருண்டு வாழ்ந்திடுவோம்.
தாயெனும் இயற்கையைச் சேயென நம்பியே
சாதனம் செய்திடுவோம்.

—திரு. சுத்தானந்த பாரதியார்

காந்தி

சொல்வது எல்லார்க்கும் சுலப மாகும்
சொன்னபடி நடப்பவர்கள் மிகவும் சொற்பம்.
எல்லையின்றி நீதிகளை எழுதுபவர்கள்
எழுதியது பிறருக்கே; தமக்கென்று எண்ணுர்
தொல்லுலகில் நாமறிந்த தலைவர் தம்முள்
சொன்னதுபோல் செய்யமுயன்ருர் இவரைப்
போல்
இல்லையெனும் மோகனதாஸ் கரம்சந்த் காந்தி
இந்தியத்தாய் உலகினுக்கே ஈந்த செல்வம்.

—வே. இராமலிங்கம் பிள்ளை

குறிப்புரை

1. வயிரவன் வாகனம் - பைரவக் கடவுளின் வகான மாகிய நாய், பார் - பூமி, நான்முகன் - பிரமன், நான்முகன்

வாகனம் - பிரம்மனின் வாகனமாகிய அன்னம், (அன்னம் - சோறு என்றும் பொருள்) நாராயணன் உயர்வாகனம் - கருடன் மேலாய்ப் பறக்கும் பட்சிராஜா, மைவாகனம் - ஆட்டுக்கிடாய், மைவாகனன்-ஆட்டுக்கிடாயை வாகனமாயுடையவன் அக்கினி, வயிற்றில் அக்கினி - பசி.

2. 'ஈ' என - கொடு என்று. இரத்தல் - யாசித்தல், இழிந்தன்று - இழிவானது, ஈயேன் - தரமாட்டேன், உயர்ந்தன்று - உயர்ந்தது.

3. முன் ஊரின்பேர் - மதுரை. முதலெழுத்தில்லாவிட்டால் துரை - (மன்னன் என்று பொருள்,) நடு எழுத்தில்லாவிட்டால் மரை (மான் என்பது பொருள்) கடைசியெழுத்தில்லாவிட்டால் மது - (தேன் என்பது பொருள்),

4. தொண்டு - நற்பணி, பாருக்கு - உலக மக்களுக்கு, கெட்ட வீச்சம் - கெட்ட நாற்றம், துலங்கிட - விளங்க, அணி - அழகு, தவிர்த்து - நீக்கி, சேய் என - பிள்ளையைப் போல, சாதனம் - பயிற்சி.

5. சொற்பம் - மிகக் குறைவு, எல்லை -அளவு, தொல் - பழமையான, ஈந்த - கொடுத்த.

வினாக்கள்

1. பசிவந்துற்றது என்பதை அந்தகக்கவி வீரராகவ முதலியார் எப்படிக் கூறுகிறார்? நாய், அன்னப்பறவை, கருடன், ஆடு இவைகள் முறையே எந்தெந்தக் கடவுளுக்கு வாகனமாகும்?

2. மைவாகனன்: பொருள் எழுதி யார் என்பதையும் எழுதுக.

3. இழிந்தது எது? உயர்ந்தது எது? மிகவும் இழிந்ததும், உயர்ந்ததும் கூறுக.

4. உங்களுக்கு வந்த விடுகதையில் அமைந்த நயம் என்ன?

5. சுத்தானந்த பாரதியார் எவ்வகையில் தொண்டுகளைச் செய்யவேண்டும் என்கிறார்?

6. இந்தியா உலகுக்களித்த செல்வம் - யார்? அவருடைய பெருமை என்ன?

7. இராமலிங்கம் பிள்ளை, நீதிகளை எழுதியவர்கள் எதை எண்ணுவதில்லை என்கிறார்?